மலர்-5 இதழ்-131 1 - 15 பிப்ரவரி 2022 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை




## இருதயப் பிரச்சனையை தீர்க்கும் மந்திரம்

## வெற்றிக்கு முந்தைய அனுமன் வெற்றிக்கு பிந்தைய அனுமன்

# சிவபூஜைக்கான மாதங்களும், மலர்களும்

| | |
|---|---|
| சித்திரை | பலாசம், |
| வைகாசி | புன்னை, |
| ஆனி | வெள்ளெருக்கு, |
| ஆடி | அரளி, |
| ஆவணி | செண்பகம், |
| புரட்டாசி | கொன்றை, |
| ஐப்பசி | தும்பை, |
| கார்த்திகை | கத்திரி, |
| மார்கழி | பட்டி, |
| தை | தாமரை, |
| மாசி | நீலோத்பலம், |
| பங்குனி | மல்லிகை |

## இருதயப் பிரச்சனையை தீர்க்கும் மந்திரம்

இதய நோய், இரத்த அடைப்பு உள்ளவர்கள், வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் தொகுத்தருளிய 'வேல் மாறல்' சுலோகத்தை நம்பிக்கையுடன், தொடர்ந்து படித்தால், இருதய பாதிப்பு எளிதாக நீங்கிவிடும்.

பாடல்:

திருத்தணியில் உதித்(து)தருளும்
ஒருத்தன் மலை
விருத்தன் என(து) உளத்தில்உறை
கருத்தன் மயில் நடத்து குஹன் வேலே.
—
திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும்

– 14 வது வரிகள்

இந்த வரிகளுக்கு இதய அடைப்பை நீக்கும் சக்தி அபரிமிதமாக உள்ளது. இந்த வரிகளைப் படித்து நிவாரணம் அடைந்தவர்கள் பலர்.

## சிவலிங்க வழிபாடும், பலன்களும்

| | |
|---|---|
| தர்ப்பைப் புல் லிங்கம் | லட்சுமி கடாட்சம் |
| ஆற்றுமணல் லிங்கம் | மோட்சம் |
| வெண்ணெய் லிங்கம் | நல்வாழ்வு |
| அரிசிமாவு லிங்கம் | சிறப்புகள் சேரும் |
| அன்ன லிங்கம் | தீர்க்காயுள் |
| களிமண் லிங்கம் | மனச்சாந்தி |
| பசுஞ்சாண லிங்கம் | ஆரோக்கியம் |




## எந்தெந்த கிழமையில் என்னென்ன நைவேத்யம்?

| | |
|---|---|
| ஞாயிறு | சர்க்கரைப் பொங்கல் |
| திங்கள் | பால் (அ)தயிர் அன்னம் |
| செவ்வாய் | வெண்பொங்கல் |
| புதன் | கதம்பசாதம் |
| வியாழன் | சித்ரான்னம் |
| வெள்ளி | பால் பாயசம் |
| சனி | புளிசாதம், |

சிவபூஜைக்கு பின்னர் இருபது சிவபக்தர்களுக்கு அன்னம் அளிப்பது மிகவும் விசேஷம். 108 ருத்ர காயத்ரி ஜபிப்பது விசேஷம்.

## விருப்பங்களை நிறைவேற்று மாத பவுர்ணமி தினங்கள்

மாத பவுர்ணமிகளில் கீழே குறிப்பிடப் படுவன வற்றால் சிவபூஜை செய்தால் அனைத்து விருப்பங்களையும் அடையலாம்.

| | |
|---|---|
| சித்திரை | மரிக்கொழுந்து. |
| வைகாசி | சந்தனம், |
| ஆனி | முக்கனிகள், |
| ஆடி | பால், |
| ஆவணி | நாட்டுச்சர்க்கரை, |
| புரட்டாசி | அப்பம், |
| ஐப்பசி | அன்னம், |
| கார்த்திகை | தீபவரிசை, |
| மார்கழி | நெய், |
| தை | கருப்பஞ்சாறு, |
| மாசி | நெய்யில் நனைந்த கம்பளம், |
| பங்குனி | கெட்டித்தயிர் |

# செவ்வாய்க் கிழமையும் விரத பலன்களும்



வருவாய் அதிகரிக்க வேண்டுமானால் செவ்வாய்க்கிழமை விரதம் இருக்க வேண்டும் என்று முன்னோர்கள் சொல்வார்கள். வாரத்தின் ஏழு நாட்களில் மூன்றாவது நாளாக இடம்பிடிப்பது செவ்வாய்க்கிழமை. அன்றைய தினம் அங்காரகனுக்கு முக்கியத்துவம் உகந்த நாளாகும்.

தங்குதடை இல்லாத வாழ்க்கையும், தன்னிகரில்லாத அளவு புகழும், மங்கல வாய்ப்புகளையும், மாபெரும் சக்தியையும் பொங்கிவரும் உள்ளத்தில் தன்னம்பிக்கையையும், பொருளாதார நிறைவையும் வழங்குவது அங்காரகன்தான். அந்த அங்காரகனுக்குரிய தெய்வமாக விளங்குவது முருகப் பெருமான் மற்றும் சக்தி தேவி.

முருகப்பெருமான், சக்தி தேவி, அம்பிகைக்கு உகந்த நாளான செவ்வாய்க்கிழமை இந்த தெய்வங்களை வணங்கினால் கவலைகள் அகலும். செந்நிற ஆடை அணிந்து வழிபாட்டில் பங்கேற்பது; நைவேத்தியமாக செந்நிற கனிவைத்து தீபாராதனை செய்ய வேண்டும்.

கார்த்திகை நட்சத்திரம் அல்லது விசாக நட்சத்திரம் அல்லது விசாக நட்சத்திரம் அமைந்த செவ்வாய்க்கிழமை விரதத்திற்கு பலன் அதிகம் உண்டு.

வீட்டு பூஜையறையின் நடுவில் வேல் வைத்து இருபுறமும் இரு விளக்குகள் வைத்து ஒரு விளக்கில் மூன்று திரிகளும், மற் றொரு விளக்கில் மூன்று திரிகளும் ஆக ஆறு தீபமிட்டு ஆறுமுகற வழி செய்து வந்தால், சீரும் சிறப்பும் வந்து சேரும். இந்த விரதத்தை மேற்கொள் ளும் போது, முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் உள்ள படம் வழிபட வேண்டும்.

செவ்வாய்கிழமை பிறந்த வர்களும், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள், ரத்த சம்பந்தமான நோய் இருப்பவர்கள், ஒன்பது வாரம் இல்லத்தில் விரதம் இருந்து 10வது வாரம் பலன் தரும் பரிகார தலத்திற்கு சென்று வழிபட்டால், நிலைமை சீராகும். வாழ்வு சிறக்கும்.

www.aanmeegamalar.com




# தலைகீழாய் காட்சி தரும் சிவன் ஆந்திராவில் அதிசய கோவில்!!!

முன்னொரு காலத்தில் சம்பாசுரன் என்ற அரக்கன் கடும் தவம் புரிந்து பிரம்மனிடம் இருந்து பல வரங்களை பெற்றான்.

தன் வரத்தை கொண்டு அனைத்து தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தி வந்தான். அஷ்டதிக்கு பாலகர்களில் யமனை தவிர அனைவரையும் தோற்கடித்தான்.

யமன் தனது பலத்தால் போர் புரிந்தார். போர் தொடர்ந்து கொண்டே இருக்க யமன் தன் பலத்தை இழந்து கொண்டே வந்தார். இறுதியாக சம்பாசுரன் யமபுரியை கைப்பற்றினான்.

தேவர் களை அடிமைப்படுத்தினான். இதனால் யமன் சிவபெருமானை நோக்கி கடும் தவம் புரிந்தார்.

அப்போது இறைவன் தற்பொழுது கோவில் உள்ள இடத்தில் ஆழ்ந்த தியானத்தில் சிரசாசனத்தில் இருந்தார். ஈசனின் தியானம் கலைய வழி அறியாது யமன் நின்றார். யமனின் வேதனை அறிந்த அன்னை பார்வதி காட்சி அளித்தார். யமனிற்கு அசுரனை அழிக்கும் சக்தி வழங்கினார்.

யமனும் சம்பாசுரனை கொன்று தேவர்கள் குறையை தீர்த்தார்.பின் இங்கு வந்து சிரசாசனத்தில் இருந்த இறைவனையும், குழந்தை முருகனுடன் இருந்த பார்வதியையும் பூஜித்தார். எனவே தான் இன்றும் இங்கே இறைவன் சிரசாசனத்தில் தலைகீழாய் காட்சி தருகிறார் என்கிறது தலபுராணம்.

யமபயம் போக்கும் சிவ பெருமான்

இங்கே கருவறையில் இறைவன் தலைகீழாய் லிங்கம் இன்றி உருவமாக காட்சி தருகிறார். சிரசை பூமியில் பதித்து பாத்தை மேலே தூக்கி நிறுத்தி சிரசாசனத்தில் காட்சி தருகிறார்.

அருகிலேயே அன்னை வேறு எங்கும் இயலா வண்ணம் குழந்தை முருகனை மடியில் கிடத்திக் கொண்டு தாய்மையே வடிவாக பார்வதி தேவி காட்சி அளிக்கிறார்.

அமைவிடம் :

யனமதுரு ஸ்ரீ பார்வதி சமேத சக்தீஸ்வரர் திருக்கோவில், ஆந்திர மாநிலம் பீமாவரத்தில் இருந்து 5 கி.மீ. தொலைவில் யனமதுரு கிராமத்தில் அமைந்துள்ளது.

# சின்ன சின்ன தத்துவங்கள்




புன்னகை பிரச்சினைகள் “வருவதை தள்ளி போடும்..!!

மௌனம் “பிரச்சினைகளே வராமல் தடுக்கும்..!

எல்லா “பிரச்சினைகளுக்கும் இந்த வாய் காரணம்!!!

www.aanmeegamalar.com

இரண்டு வயது ஆவ தற்குள் நாம் பேச கற்றுக் கொள்கிறோம்.ஆனால் எத்தனை வயது ஆனாலும், “எப்படி பேச வேண்டும்” என்பதை நாம் கற்றுக் கொள்வதில்லை...!

நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபர்களும் வெவ் வேறு விதமான போராட்டக் களத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்...

நம்மில் பெரும்பாலானோர், சுய ஆர்வம் கொண்டு நீந்த கற்றுக் கொண்டதை விட, இன்னொருவர் தள்ளி விட்டதன் மூலம் நீந்த கற்றுக் கொண்டவர்களே அதிகம்.

வாழும் நாட்களில் சந்தோஷத்தையும், மன அமைதியையும் தேடுங்கள்... மனிதனுடைய வாழ்நாள் தேவைகள், ஒரு போதும் தீர்ந்து விடப் போவதில்லை.

அன்பை வெளிப்படுத்த தயக்கம் இருப்பது போலவே... இந்த கோபத்தை வெளிப்படுத்த வும் இருந்து விட்டால் எத்தனை நன்றாக இருந்து விடும்?

சிரித்துக் கொண்டே உன்னோடிருந்து உனை சீரழிக்கும் துரோகியைவிட முறைத்துக் கொண்டே உன் முன்னிருக்கும் எதிரி மேலானவன்!

அவ்வளவுஎளிதாக யாரிடமும் இருந்து பிரிந்து விட இயலவில்லை... பிரிவு என்ற பெயரில் கொஞ்சம் ஒதுங்கி மட்டுமே இருக்க முடிகிறது.

உனக்காக... தன் மீதான நியாயமான வாதத் தைக் கூட நிறுத்திக் கொள்ளும் நட்பு கிடைத்தால் ஒருபோதும் இழந்து விடாதே..

அலைகளில் கால்களை நனைக்கும் சுகம், கப்பலில் கடல் நடுவில் பயணப்படும்போது கிடைப்பதில்லை...

பேரின்பம் வேண்டாம்... சிறுசிறு சந்தோஷங்கள் போதும் வாழ்வை அனுபவிக்க....

நூறு பேரின் வாயை மூட முயற்சிப்பதை விட நம் காதுகளை மூடிக்கொள்வது மிகச் சிறந்தது.

கெட்ட உள்நோக்கத்துடன் கூறப்படும் உண் மை, ஆயிரம் பொய்களைவிட மோசமானது!

வேலை இல்லாதவனின் பகலும், நோயாளியின் இரவும் மிக நீளமானவை.

வாழ்வோடு போராடிச் சாவதிலும் சாவோடு போராடி வாழ்வதிலுமே வாழ்க்கை முடிந்து விடுகிறது!

தவறான வழியில் வெல்பவனை வாழ்த்தியும், நேர்மையான வழியில் சென்று தோற்பவனை தாழ்த்தியும் பேசும் சமுதாயம்தான் குற்றங் களுக்கு காரணம்!

வாழ்க்கையில் கஷ்டங்களும், கவலைகளும் நமக்கு மட்டும்தான் அதிகமா வருதுன்னு நினைக்கிறவங்க அனைவருமே மிகப்பெரிய முட்டாள்கள்.

அறிவாளியை விலை கொடுத்து வாங்கிவிட லாம். உணர்ச்சி உள்ள மனிதனையும், அன் பான மனிதர்களையும் விலை கொடுத்து வாங்க முடியாது.

வாழ்க்கை மிகச் சிறியது என்பதால்... அன்பை அதிகமாகவும், கோபங்களைக் கஞ்சத்தன மாகவும், மன்னித்தல்களை விரைவாகவும் வெளிப்படுத்த கற்றுக் கொள்ளுங்கள்...


www.aanmeegamalar.com

# வெற்றிக்கு முந்தைய அனுமன்

# வெற்றிக்கு பிந்தைய அனுமன்

வரலாற்று நிகழ்வை பகுத்து ஆய்வதற்கும், தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கும் சில குறிப்புகளை சுட்டிக்காட்டுவார்கள்.

எளிமையாக தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் கி.பி., கி.மு., என்று வருவதை பார்த்திருப்போம், இது கிருஸ்து பிறப்பிற்கு முன் கிருஸ்து பிறப்பிற்கு பின் என்று வரலாற்று நிகழ்வை எளிமையாக புரிந்து கொள்ள வரையறுத்து கூறப்படுகிறது.

இதே போன்று

இராமாயணத்தில் முக்கியமான அனுமனை **வெற்றிக்கு முன் அனுமன் வெற்றிக்கு பிந்தைய அனுமன்** என்று கூறலாம்.

இந்த வரையரையை அனுமனின் வாலில் தொங்கும் மணியை வைத்தே கணிக்கமுடியும்.

நாம் அனுமனை தரிசிக்கும்போது, அல்லது அனுமனின் படத்தைப் பார்க்கும்போது கவனித்திருக்கலாம் அனுமனின் வாலில் ஒரு மணி தொங்கிக் கொண்டிருக்கும். வாலில் அந்த மணி எப்படி வந்தது தெரியுமா? அது ஒரு கதை. படியுங்கள்.

தந்தை தசரதன் தன் பத்தினி கைகேயிக்கு

கொடுத்தவாக்குப்படி ஸ்ரீராமன் சீதா பிராட்டியுடனும் தன் சகோதரன் லட்சு மணனுடனும் பதினான்கு ஆண்டு வனவாசத்திற்கு சென்றதும் அந்த வனத்தில் சீதையை ராவணன் கடத் திச் சென்ற கதையும் தெரிந்ததே.

சீதையை மீட்க ராவணனுடன் போர் புரிய இலங்கைக்கு புறப்படும் முன் ஸ்ரீ ராமன் வானரப்படையை திரட்டிக் கொண்டிருந்தார்.



கீதா-ராஜன்

வானரங்களில் பல வகை உண்டு. உயரமானவை, குட்டையானவைஇவற்றில் "சிங்கலிகா" என்று அழைக்கப் படும் குள்ளமான வானரங்கள் கொண்ட ஒரு படை. இதில் ஆயிரம் வானரங்கள். இவை எப்படி போர்புரியும் என்று ஆச்சரியமாக இருக்கிற தல்லவா? இவை கூட்டமாக சென்று எதிரியின் படைவீரர்கள் மேல் விழுந்து பற்களால் கடித்துக் குதறியும் நகங்களால் பிராண்டியும் போரிடும்.

போருக்குப் புறப்படும் வீரர்களை வழியனுப்பும் போது அவர்கள் குடும்பத்தார்களின் கண்களில் கண்ணீர் வடித்தனர். "சிங்கலிகா" வீரர்கள் உயிருடன் பத்திரமாக திரும்பி வரவேண்டுமே என்ற கவலையில் கண்ணீர் சிந்தினர் குடும்பத்தினர்.

இதைக் கவனித்த ஸ்ரீராமன் கூறினார் "யாரும் கவலைப்பட வேண்டாம். என் படை வீரர்களை பத்திரமாக திருப்பிக் கொண்டு வந்து சேர்ப்பது என் பொறுப்பு" என்று வாக்குறுதி கொடுத்தார்.

போர் ஆரம்பமாயிற்று, கடும்போர் நடந்து கொண்டிருந்தது. ராவணனின் படையில் பல முக்கியமான வீரர் களும் படைத் தலைவர்களும் மடிந் தார்கள். வேறு வழியில்லாமல் தூங் கிக் கொண்டிருந்த தன் தம்பி கும்பகர்ணனை எழுப்பி போரிடச் சொன்னான் ராவணன்.

ராட்சசனைப் போல் இருந்தாலும் கும்பகர்ணன் மிகவும் நல்லவன். கும்பகர்ணன் "இந்த போர் வேண் டாம் நீங்கள் சீதாதேவியைக் கடத்திய தற்காக ஸ்ரீராமனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் " என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ராவணன் கேட்கவில்லை. வேறு வழியின்றி அண்ணனின் ஆணைப்படி போருக்குப் புறப்பட்டான் கும்பகர்ணன்.

கும்பகர்ணனின் ராட்சத உருவத்திற்கேற்றாற் போல் அவனது தேரும் மிகப்பெரியதாக இருந் தது. தேரின் முன்புறம் பெரிய பெரிய மணிகள் தொங்கிக்கொண்டிருந்தன.

போர் தொடங்கி சிறிது நேரத்தில் ராம பாணத் திற்கு பலியானான் கும்பகர்ணன். தேரிலிருந்து சாயும்போது கும்பகர்ணனின் கை பட்டு ஒரு மணி கழன்று கீழே விழந்தது. கீழே விழுந்த மிகவும் பெரிய பாரமான மணி, போரிட ஒன்றாக ஓடிக்கொண்டிருந்த ஆயிரம் "சிங்கலிகா" வானரங்கள் மேல் விழுந்து அவர்களை மூடி விட்டது.


## aanmeegamalar.com வழங்கும்
# தினம் ஒரு திருக்குறள்







ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்

திடீரென்று தங்கள் மேல் எதையோ வைத்து மூடிவிட்டதைப் போன்று உணர்ந்த வானரங்கள் பயந்து விட்டன. ஒரே இருட்டு. நல்லவேளை மணி விழுந்த இடம் கரடு முரடாக இருந்ததால் சுவாசிக்க காற்று வந்தது. சில மணி நேரங்கள் ஆன பிறகும் அவர்களைக் காப்பாற்ற யாரும் வரவில்லை.

ஒரு வானரம் சொன்னது "இந்த சுக்ரீவனை நம்பி வீணாகப்போய்விட்டோம். நாம் எல்லோரும் சாகப்போவது உறுதி" என்றது

"சுக்ரீவனும் அனுமனும் ஒன்றும் செய்யப்போவ தில்லை நம்மைக் காப்பாற்ற. நம் தலைவிதி இப்படியே கிடந்து சாகவேண்டியதுதான்" சொன் னது இன்னொரு வானரம்

"ஸ்ரீராமன் சொன்னாரே போருக்கு புறப்பட்டவர் களையெல்லாம் பத்திரமாக உயிரோடு திரும்ப கொண்டுவந்து சேர்ப்பது அவர் பொறுப்பு என்றாரே, அவர் மட்டும் என்ன செய்தார்" இன்னொரு வானரம் சொன்னது.

இதைக்கேட்ட மற்ற வானரங்களும் "ஆமாம் ஆமாம்" என்றன.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அவர் களில் ஒரு மூத்த வானரம் எல்லோரையும் அதட் டியது.

"வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுவதை நிறுத் துங்கள். நான் சொன்னதை மட்டும் செய்யுங்கள். எல்லோரும் கண்களை மூடிக் கொண்டு ஸ்ரீ ராமனை மனதில் நினைத்துக் கொண்டு 'ராம் ராம் ராம்' என்று ஜெபம் செய்யுங்கள். ஸ்ரீ ராமன் நம் எல்லோரையும் நிச்சயம் காப்பாற்றுவார்" என்று சொன்னது.எல்லா வானரங்களும் அப் படியே செய்தன.

இந்நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் போர்க்களத்தில் ராமபாணத்தால் ராவணனும் கொல்லப்பட்டான். போர் முடிந்தது. சீதாப்பிராட்டியை மீட்டதும் அயோத்திக்கு திரும்ப ஆயுத்தமானார்கள்.

அப்போது ஸ்ரீராமன் சொன்னார் " சுக்ரீவா நம் படையில் எல்லோரும் பத்திரமாக இருக்கி றார்களா. எண்ணிக்கொண்டு வா" என்று.

"பிரபு ! எண்ணி விட்டேன். ஆயிரம் சிங்கலிகர் கள் மட்டும் காணவில்லை" என்றான் சுக்ரீவன்.

"இல்லை மற்றுமொறு முறை சரியாக எண்ணி வா" என்றார் ஸ்ரீராமன்.

ஸ்ரீராமனின் ஆணைப்படி மற்றொருமுறை எண்ணிவிட்டு வந்த சுக்ரீவன் சொன்னான்.

"தங்கள் ஆணைப்படி இன்னொரு முறை எண்ணினேன். ஆயிரம் சிங்கலிகர்கள் மட்டும் காணவில்லை"




"அனுமா நீயும் என்னுடன் வா. நாம் அந்த ஆயிரம் வானரங்களை தேடுவோம்." என்றார் ஸ்ரீராமன்.

அனுமனும் ஸ்ரீராமனும் வானர்களைத்தேடி போர்க்களத்தில் நடந்தார்கள். பல இடங்களில் மடிந்து கிடந்த படை வீரர்கள், உடைந்து கிடந்த தேரின் பாகங்கள், அம்புகள், கேடயங்கள் என்று எல்லாவற்றையும் கிளறிப்பார்த்தார் அனுமன். சிங்கலிகர்கள் தென்படவில்லை.

திடீரென்று ஸ்ரீராமன் ஒரு இடத்தில் நின்றார்.

"அனுமா! அங்கே பார். ஒரு பெரிய மணி தெரிகிறது."

ஸ்ரீராமன் என்ன சொல்லப்போகிறார் என்று புரிந்து விட்டது அனுமனுக்கு. இருவரும் விரைந் தார்கள் அந்த இடத்திற்கு.

அனுமன் தன் வாலின் நுனியை அந்த மணியின் வளையத்தில் நுழைத்து தூக்கினான். சஞ்சீவி பர்வதத்தையே தன் ஒரு கையால் தூக்கிக் கொண்டு பறந்த அனுமனுக்கு இது ஒரு பொருட்டாக தெரியவில்லை !

அனுமன் மணியைத் தூக்கியதும் அதன் கீழ் ஆயிரம் சிங்கலிகர்கள் கண்களை மூடிக்கொண்டு கைகூப்பியபடி ராமநாமம் ஜபித் துக்கொண்டிருந்தன. பல மணி நேரத்திற்குப்பின்

வெளிச்சமும் காற்றும் பட்டதும் கண்களைத் திறந்தன வானரங்கள்.

எதிரே ஸ்ரீராமனும் அனுமனும்.

வரிசையாக கை கூப்பியவாறு நின்று கொண் டிருந்த வானரங்களின் கண்களில் கண்ணீர்.

"பிரபு! என்ன நடந்தது என்று தெரியாமல் இருட்டில் பயந்து அடைந்து கிடந்த நாங்கள் ஏதேதோ தவறாகப் பேசி விட்டோம். உங்கள் மேலேயே சந்தேகப்பட்டு விட்டோம். எங்களை மன்னித்து அருள வேண்டும்" என்று சொல்லி ஆயிரம் வானரங்களும் ஸ்ரீராமனின் பாதங்களில் விழுந்து வணங்கின.

அதைக்கேட்டு புன் முறுவல் செய்த ஸ்ரீராமன் எல்லா வானரங்களையும் தன் கையால் தடவிக்கொடுத்தார்.

அருகில் நின்றிருந்த அனுமன் பக்கம் திரும்பிய ஸ்ரீராமன் அனுமனைப் பார்த்து சொன்னார்

"அனுமா! வாலில் பளபளக்கும் மணியுடன் நீ இப்படி நிற்கும் காட்சி எவ்வளவு சுந்தரமாக இருக்கிறது தெரியுமா? இந்தக் கோலத்தில் உன்னை தரிசிப்பவர் களுக்கு பக்தி, ஞானம், வைராக்கியம் கிட்டும்" என்று வாழ்த்தினார்.

இந்த நிகழ்விற்கு பின் வெற்றி, ஜெயம், போன்றவற்றை பெற விரும்புபவர்கள் அனுமனின் வாலில் மணி உள்ள சிற்பங்களை செதுக்கி வழிபட ஆரம்பித்தனர்.

பெரும்பாலும் தென்னிந்தியாவில் வியாசராஜர் பிரதிஷ்டை செய்த 732 அனுமன் விக்கிரகங்களிலும் வாலில் மணி தொங்கிக்கொண்டிருப்பதாக இருக்கும்.

இந்த வரலாற்றுக்கு முன்பு அனுமனின் வாலில் மணி இல்லாத விக்ரகங்களும் பல கோவில்கள் காண முடியும்.

அனுமன் என்றாலே வெற்றி ஜெயம்தான், அதிலும் இராமாயண வெற்றிக்குப் பின் மிகுந்த மகிழ்ச்சியும், வெற்றிப்பூரிப்பும் உள்ள அனுமனை வாலில் மணியுடன் வணங்கிவந்தால் தொட்டது, நினைத்தது நிறைவேறும்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203




# சீதா தேவி பிரதிஷ்டை செய்த ராமநாத சுவாமி (மணல் லிங்கம்)

ராமேஸ்வரம் ஸ்ரீராமநாதசுவாமி கோயில் கருவறையில் உள்ள மணலால் ஆன மூலவர் ராமநாதசுவாமி சீதா தேவியால் கடற்கரை மணலிலே உரு வாக்கபட்டு ஸ்ரீராமரால் வழிபாடு செய் யப்பட்ட சிவலிங்கமாகும்.

காசி விஸ்வநாதருக்கு நிகராக போற்றப்படக்கூடிய லிங்கம். சீதா தேவியால் மணலில் உருவாக்கப்பட்ட இந்த சிவலிங்கம்தான் ராமேஸ்வரம் திருத்தலத்தில் மூலவராக இன்றும் உள்ளது.

ஸ்ரீராமநாதசுவாமி கோயில் கருவறை யில் உள்ள மணலால் ஆன மூலவர் ராமநாதசுவாமி சிவலிங்கத்தினை தரிசிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

காண்பதற்கரிய இந்த மணலால் ஆனமூலவர் ராமநாதசுவாமியின் புகைப் படத்தை நமது வாசகர்கள் பார்த்து அருள் பெறவும்.



# விருப்ப சந்தா



## நிர்பந்தம் கிடையாது

ஆன்மிகமலர்.காம் இணையதளம் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கு

## விருப்ப சந்தாவை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

சந்தா செலுத்த விரும்புபவர்களை வரவேற்கிறோம், விருப்பமில்லை என்றால் எவ்வித கட்டாயமும் கிடையாது, தொடர்ந்து நமது வாசகர்களாக தொடர்ந்து நமது இதழை படித்து பயன்பெறலாம்.

நமது சேவையில் பல்வேறு வளர்ச்சிப் பணிக்கு பொருளாதார ரீதியில் உதவி தேவைப்படுவதால் விருப்ப சந்தாவை அறிமுகப்படுத்துகிறோம்.






எங்கள் பணிக்கு உதவி செய்ய விருப்பமுள்ள அன்பர்கள் ரூ.10 முதல் விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

# தீய சக்திகளை தடுக்கும் வழிமுறைகள்

- ❖ ஓடும் தண்ணீரை தீய சக்தியால் தாண்டமுடியாது,
- ❖ கமண்டலத்தில் உறுஏற்றி வைத்துள்ளமந்திர தண்ணீரை சிறிது வலது கை உள் ளங்கையில் ஊற்றி நமக்கு சித்தியான மந்திரத்தை மனதிற்குள் மனம் ஒன்றி கூறி நம் முன் தெளித்தால் தீயசக்தி விலகிவிடும்.
- ❖ அக்னி வளர்த்து நம் தேவதையை நினைவு கூர்ந்தாலும் தீயசக்தி விலகி ஓடிவிடும்.
- ❖ இருபக்கமும் மூச்சு காற்றை நன்கு இழுத்து வேகமாக வெளியேற்றினால் தீயசக்தி ஓடி விடும்,
- ❖ வலது காலை அழுத்தமாக பூமியில் உதைத் தாலும் தீயசக்தி விலகிவிடும்.
- ❖ வலதுகால் இடதுகால் பெருவிரலை பூமியில் அழுத்தி நின்றாலும் தீயசக்தி விலகிவிடும்.
- ❖ வலதுகை மணிகட்டில் ஒரு கயிரினை இருக்க மந்திரம் ஓதி கட்டினாலும் தீயசக்தி விலகிவிடும்.
- ❖ பாதிக்கப்பட்டவர் முகத்தில் மந்திரம் ஓதிய நீரை தெளித்தாலும், வேப்பிலை இலையை கையில் வைத்திருந் தாலும், மயில் இறகை கையில் வைத்திருந் தாலும், எதாவது ஒரு உலோகத்தை கையில் வைத் திருந் தாலும் தீயசக்தி அணுகாது. தீயது இருந்தாலும் விலகிவிடும்.
- ❖ எலுமிச்சை கனியை கை யில் வைத்திருந்தாலும் அல்லது தலையில் வைத்து சிறிதுநேரம் பொருத்து அதை காலால் நசுக்கி வீசிவிட்டு காலை கழுவிக் கொண்டாலும் தீயசக்தி விலகிவிடும்.
- ❖ உப்பு தண்ணீரில் நின்றாலும், மஞ்சள் கலந்த தண்ணீரில் நின்றாலும் தீயசக்தி விலகிவிடும், அண்டாது.
- ❖ துளசி செடி இருக்கும் அருகில் தீயசக்தி அறவே வராது. (அதனால் தான் காட்டில் குடில் அமைத்து வாழ்ந்த தவசிகள் துளசி செடியை வளர்த்து வழிபட்டனர்.)
- ❖ ஐவகை எண்ணெய் சேர்த்து எரியவிடும் தீபத்தின் அருகில் தீயசக்தி விலகிவிடும்.
- ❖ நாய் உடன் இருந்தாலும் தீயசக்தி அண்டாது.
- ❖ பசுவின் சாணம் பட்ட இடத்திலும் தீயசக்தி அண்டாது, பசுவின் ஜலம் பட்ட இடத்திலும் தீயசக்தி விலகிவிடும்.
- ❖ நமக்கு மிக நம்பிக்கையான தெய்வத்தை நினைத்து செப்பு தகட்டில் ஒரு சூலம் வரைந்து உடலில் எங்காவது தாயத்து இட்டு அணிந்து கொண்டாலும் தீயசக்தி அண்டாது விலகிவிடும்,
- ❖ பௌர்ணமி இரவு முழுக்க தூங்காமல் இருந்து அரசமரத்தை வலம் வந்தால் விரும்பியதை அடையலாம். தீயசக்தியும் விலகிவிடும்.
- ❖ அமாவாசை இரவில் அகண்ட தீபம் ஏற்றி அதன் அருகில் தூங்காமல் தீபத்தையே உற்று பார்த்துக் கொண்டிருந்தாலும் விருப்பம் நிறைவேற வழிபிறக்கும் தீயசக்தியும் விலகிவிடும்.
- ❖ மிருதங்கம், உடுக்கை, சங்கு போன்ற இசை யை உற்று






நோக்கினாலும்தீயசக்தி அண்டாது விலக வழிகிடைக்கும்.

❖ இடதுகால் மணிக்கட்டில் கருப்பு கயிறில் மந்திரம் ஓதி மூன்று முடிச்சிட்டு கட்டிக் கொண்டாலும் தீயசக்தி விலகிவிடும்.

❖ கல்யாண பூசணியோ அல்லது எலுமிச்சை கனியையோ கத்தியால் சரிபாதியாக வெட்டி குங்குமம் தடவி அமரும் இரு பக்கமும் வைத்தாலும் அல்லது வீட்டின் தலைவாயிற்படி இருபக்கமும் வைத்தாலும் தீயசக்தி விலகிவிடும்.

❖ நம் கையால் பெரிய அளவு உள்ள தேங்க ாயை நன்கு சிதறும்படி உடைத்தாலும் தீய சக்தி விலகிவிடும்.

❖ நெய், வெண்ணெய், பால் உணவு சாப்பிட்டு அது செரிக்கும் வரை தீய சக்தி அண்டாது. நெய்தீபம் எரியும் இடத்திலும் தீயசக்தி விலகி நிற்கும்.

❖ சுத்த சந்தனம் நெற்றியில் வைத்துக் கொண் டாலும் தீயசக்தி அண்டாது விலகிவிடும்.

❖ வாசியை உயர்த்தும் பயிற்சி கொண்டவர் களுக்கும், வெளி இடங்களில் தூங்காத வருக்கும், நெற்றிக்கண்ணை கூர்ந்து கவனிப் பவருக்கும், மந்திரம் செபிப்பவருக்கும், சிந் தனை அறிவு உள்ளவருக்கும் தீயசக்தி அண்டாது.

❖ திருஷ்டி மற்றும் திட்டமிட்டு செய்யும் சூன்யம் வைப்பு போன்றவை எவரையும் தாக்கிவிடும். தீய எண்ணத்தாக்கம் கொண்ட உணவை உண்டாலும் உணவு விஷமாகிவிடும். அதனால்தான் விரோதி வீட்டில் கை நனைக்காதே என்பார்கள். எனவே இதுபோன்ற பாதிப்பு உள்ளவர்கள் தகுந்த எச்சரிக்கையுடன் இருப் பது அவசியம்.

மந்திர உபாசனைசெய்ப வராகட்டும் சாமான்ய ராகட்டும் வெளியில் செல்லும்போது காலணி அணிந்து செல்லுங்கள். கால்அடிகளை பதிப்பத னால் அது ஆலயத்தின் உள்ளே மற்றும் விருட்சத்தின் அடியில் இருக்கலாம். கண்ட இடங்களில் கால் அடியை பதித்தால் அதன்மூலம் மண்எடுத்து சூன்யம் செய்ய மற்றவருக்கு வாய்ப்புள்ளது.

❖ தலைமுடியை கண்ட இடங்களில் போடவேண் டாம். முடிவெட்டும்போது முடி விழத்தான் செய்யும். ஆனால் அங்கு வேறொருவரின் முடியுடன் நம் முடி கலந்துவிட்டால் சூன்யம் வேலை செய்யாது.

❖ உங்கள் அழுக்கு துணியை பத்திரமாக வைத்து துவைத்து விடவும். விரோதி கை யில் சிக்கும்படி வைக்காதீர்கள். உங்கள் அழுக்கு துணி மற்றவர் வியர்வையில்பட்டால் கூட நீங்கள் வசியமாகிவிடுவீர்கள் கவனம்.

❖ வெளியில் சாப்பிடாதீர்கள். வாராவாரம் திருஷ்டி சுற்றிப் போட்டுக்கொள்ளுங்கள், தெய்வ பிராத்தனையை எப்பொழுதும் கைவிடாதீர்கள்.

❖ உடற்கட்டு மந்திரம் போட்டுக்கொண்டவரை எந்த தீயசக்தியும், திருஷ்டியும், வைப்பும் அணுகாது. உணவு மூலம் விஷயம் ஏறினால்தான் உண்டு. எனவே உடற்கட்டு காபந்து உள்ளவராயினும், உணவு விஷயத்தில் கவனமாக இருங்கள்.

❖ சூரியசக்தியை உடலில் பெருக்கிக் கொள்கிறவர்களுக்கு திருஷ்டி சூன்யம் அண்டாது. யார் தொடுத்தாரோ அவரையே திருப்பி தாக்கிவிடும். அதனால்தான் சூரியன் அம்சமான சிம்மராசி லக்கணம் மற்றும் சூரிய நட்சத்திரக்காரர்களை எவர் ஒருவர் திருஷ்டி சூன்யம் வைப்பு செய்தாலும் வைத்தவரையே திருப்பி தாக்கிவிடும் என்பர் இது முற்றிலும் உண்மையே.

# நான்... யாருக்கு தகுதியுள்ளது

நான்... நான்... நான்...
நான் சம்பாதித்தேன்,
நான் காப்பாற்றினேன்,
நான் தான் வீடு கட்டினேன்,
நான் தான் உதவி செய்தேன்,
நான் உதவி செய்யலனா?
அவர் என்ன ஆகுறது!
நான் பெரியவன்,
நான் தான் வேலை வாங்கி கொடுத்தேன்,
நான் நான் நான் நான்
என்று மார்தட்டி கொள்ளும் மனிதர்களே!!!

- நான் தான் என் இதயத்தை இயக்குகிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா?
- நான் தான் என் மூளையை இயக்குகிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா?
- நான் தான் என் இரண்டு கிட்னியையும் இயக்குகிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா?
- நான் தான் என் வயிற்றில் சாப்பிட்ட உணவில் இருந்து சத்துக்களை தனியாக பிரித்து இரத்தத்தில் கலக்குகிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா??
- நான் தான் பூக்களை மலர வைக்கிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா?

இவைகள் அனைத்தையும் எவன் செய்கிறானோ இயக்குகிறானோ அவன் ஒருவனுக்கே "நான்" என்று சொல்வதற்கு அதிகாரமும் உரிமையும் உண்டு.




ஆகையால் நான் என்ற அகந்தையை விட்டு அனைவரிடமும் அன்பாக இருங்கள்.

உலகைப்பற்றிக்கவலைப்படாதே ஏனெனில் அது இறைவனுக்குரியது.

உணவைப்பற்றி கவலைப்படாதே! அது இறைவனிடமிருந்தே கிடைக்கிறது.

எதிர்காலம் குறித்தும் கவலைப்படாதே! அதுவும் இறைவனின் கரத்தில் தான் உள்ளது எல்லாவற்றையும் வழங்கிய இறைவனுக்கு இணை வைக்காதே! அதற்கு கூலி நிரந்தர நரகப் படுகுழி எத்தனை கோடி வருடங்கள் ஆனாலும் வெளியேற முடியாது.

உனக்கு மேலே உள்ளவனைப் பார்த்து ஏங்காதே தாழ்வுமனப்பான்மை வரும்

உனக்கு கீழே உள்ளவனை ஏளனமாய் பார்க்காதே தலைக்கனம் வரும்.

உன்னை யாரோடும் ஒப்பிடாமல் நீ நீயாக இரு தன்னம்பிகை வரும்.

www.aanmeegamalar.com

# திருச்செந்தூர் முருகன் திருக்கோவில் அற்புத சிறப்புகள்




முருகப்பெருமானுக்குரிய பழனி, திருச் செந்தூர், திருத்தணி, சுவாமிமலை, திருப்பரங் குன்றம், பழமுதிர் சோலை என ஆறுபடை வீடுகளில் ஐந்து கோயில்கள் மலை மீது அமைந்திருக்கின்றன. திருச்செந்தூர் மட்டும் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது.

சூரபத்திரனை வதைக்க முருகப்பெருமா னுடன் அவரது தளபதி வீரபாகு மற்றும் படைவீரர்கள் தங்கி யிருந்த படைவீடு தான் திருச்செந்தூர் ஆகும். அப்படிப்பட்ட பெருஞ்சிறப்புக்குரிய திருச்செந்தூர் சுப்பரமணிய சுவாமி கோயிலை பற்றி சில சுவாரஸ்ய தகவல்களைப் பார்ப்போம்.

**தல சிறப்புகள்:**

சூரபத்திரன் என்ற அரக்கனை முருகப் பெருமான் ஐப்பசி மாதம் வளர்பிறை சஷ்டி யன்று தனது வைர வேல் கொண்டு வதைத்து வெற்றிகொண்டார்.

இது நிகழ்ந்த இடமே திருச்செந்தூர் ஆகும். எனவே தான் ஒவ்வொரு வருடமும் கந்தசஷ்டி விழா வன்று 'சூரா சம்காரம்' இங்கு வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது.

திருச்செந்தூரில் கந்த சஷ்டி விழா வெகு சிறப் பாக கொண்டாட வேறொரு காரணம் ஒன்றும் சொல்லப் படுகிறது. சில முனிவர் கள் உலக நன்மைக்காக புத்திரன் ஒருவன் வேண்டுமென்று கருதி ஐப்பசி மாத அமா வாசை யன்று துவங்கி, ஆறு நாட்கள் யாகத் தை நடத்தியிருக்கின்றனர்.

அந்த ஆறு நாட்களும் ஒவ்வொரு நாளும் ஒவ் வொரு வித்து வெளியானதாகவும் அந்த ஆறும் இணைந்தவனே ஆறுமுகன் எனப்படும் முருகன் ஆவார். எனவே முருகன் திருச்செந்தூரில் ஜனித்த தினமே கந்தசஷ்டி விழாவாக கொண்டாடப்படுகிறது

என்றும் சொல்லப்படுகிறது.

சிலப்பதிகார குறிப்புகள் படி இக்கோயில் 2000 ஆண்டுகள் பழமையானதாக சொல்லப் படுகிறது. இவ்விடம் முன்னர் 'திருச்சீரலைவாய்' என்றலைக்கப்பட்டதாம்.


புனிதவேல்

சூரபத்திரனை வெற்றிகொண்டதால் இங்கே கோயில் கொண்ட முருகப்பெருமான் 'செயந்திநாதர்' என்று அழைக்கப்பட்டது. அதுவே பின்னாளில் மருவி 'செந்தில்நாதர்' என்று மருவியதாம். அதுபோலவே இவ்வூரும் 'திருசெயந்திபுரம்' என்பதிலிருந்து திருச்செந்தூர் என்றானதாக சொல்லப்படுகிறது.

அறுபடை வீடுகளில் மலைமீது அமைந்திராத கோயில் இது மட்டுமே. திருச்செந்தூர் கோயிலின் ராஜகோபுரம் ஒன்பது அடுக்குகளை கொண்டு 150 அடி உயரமுடையதாகும்.

இங்கே முருகன் இடது கையில் தாமரை மலருடன் ஜடாமுடி கொண்டு சிவயோகி போல காட்சிதருகிறார். முருகனின் சிலைக்கு பின்னால் இடதுபுற சுவரில் போரில் வெற்றிபெற்றுவந்த முருகன் பூசை செய்ததாக சொல்லப்படும் லிங்கம் ஒன்று இருக்கிறது. அதற்கு முதலில் பூசை செய்தபிறகே முருகனுக்கு பூசை செய்யப் படுகிறது.

மேலும் முருகன் சந்நிதிக்கு வலப்புறத்தில் "பஞ்சலிங்க" சன்னதி ஒன்றும் இருக்கிறது. மூலவர் முருகரின் இடதுபுறம் உள்ள சிறு வாயில் வழியே உள்ளே நுழைந்து சுற்றி வலது புறம் வந்து பாதாள பஞ்சலிங்க தரிசனம் செய்ய வாரநாட்களில் பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

திருச்செந்தூர் முருகன் கோயில் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கிறது. திருச்செந்தூரில் முருகனுக்கு தினமும்9 கால பூஜை நடைபெறுகிறது. சிறுபருப்பு பொங்கல், கஞ்சி, தோசை, அப்பம், நெய் சாதம், ஊறுகாய், சர்க்கரை கலந்து பொரி, அதிரசம், தேன்குழல், அப்பம், வேக வைத்த பாசிப்பருப்பு, வெல்லம் கலந்த உருண்டை பலவிதமான நைவேத்தியங்கள் செந்தில்நாதருக்கு படைக்கப் படுகிறது.

### கங்கை பூசை:

தினமும் மதியம் உச்சிகால பூசை முடிந்தபிறகு ஒரு பாத்திரத்தில் பால், அன்னம் எடுத்துக்கொண்டு மேள, தாளத்துடன் சென்று கடலில் கரைக்கின்றனர். இந்த சடங்கே 'கங்கை பூஜை' எனப்படுகிறது.

### மஞ்சள் நீராட்டு:

திருமணத்திற்கு முன்பு கன்னிப்பெண்கள் தங்கள் முறைப்பையனுக்கு மஞ்சள் நீரூற்றி மகிழ்வர். கந்தசஷ்டி விழாவின் கடைசி நாளன்று தனது மனைவி தெய்வானையுடன் வருகையில் தங்கள் ஊரில் தெய்வானையை திருமணம் செய்துகொண்டதற்காகவும் போரில் வெற்றிவாகை சூடிவந்த முருகனின் உக்கிரத்தை குறைக்கும் விதமாகவும் முருகன் மீது பக்தர்கள் மஞ்சள் நீரூற்றி விளையாடுகின்றனர்.

### தீபாவளிக்கு புத்தாடை:

தீபாவளிக்கு மக்கள் அனைவரும் புத்தாடை அணித்து கொண்டாடுவது வழக்கம். திருச்செந்தூர் கோயிலிலும் அனைத்து சுவாமிகளுக்கும் தீபாவளியன்று புத்தாடை அணிவிக்கப்படுகிறது.

தனது மகளான தெய்வானையை முருகன் மணமுடித்திருப்பதால் மருமகனுக்கு இந்திரன் புத்தாடை எடுத்துத்தருவதாக நம்பப்படுகிறது.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்:
9841807572



# இயற்கை மருத்துவம்

- ❖ தினமும் காலையில் சாப்பிட்டவுடன் வென்னீரில் தேன் கலந்து குடித்து வர ஞாபக சக்தி அதிகமாகும்.
- ❖ கோதுமையை பொன்னிறமாக வறுத்து அரைத்து சலித்து தேன் கலந்து சாப்பிட மூட்டு வலி குணமாகும்.
- ❖ திருநீற்றுப்பச்சை இலைச்சாற்றை மூக்கில் நுகர தும்மல் வந்து மூளைக்காய்ச்சல் கிருமி வெளியேறும்.
- ❖ வெள்ளைப்பூண்டை கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வர இடுப்பு வலி குணமாகும்.
- ❖ தும்பை இலைச்சாறு எல்லா விஷக்கடிகளுக்கும் சிறந்தது.
- ❖ வெந்தயம், குன்றிமணி பொடி செய்து தேங்காய் எண்ணெயில் ஊற வைத்து ஒரு வாரத்திற்குப்பின் தினமும் தேய்த்து வந்தால் முடி உதிர்வது நிற்கும். வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் வேக வைத்து ஒரு நாள் கழித்து மறுநாள் வேக வைத்த நீரை கொண்டு தலை முழுகி வந்தாலும் முடி உதிர்வு நிற்கும். பேன் நீங்கும்.
- ❖ வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி சிறிது பனங்கற்கண்டு சேர்த்து வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர நரம்புத்தளர்ச்சி குணமாகும்.
- ❖ மூளை பலம் பெற எலுமிச்சை பழம் மிகவும் நல்லது.
- ❖ விளாம்பூக்களை சுத்தம் செய்து நீரில் கொதிக்க விட்டு வடிகட்டி உள்ளுக்கு சாப்பிட்டு வர எலி விஷம் நீங்கும்.
- ❖ தீப்புண்ணால் தோலின் நிறம் மாறி வெள்ளையாக இருந்தால், வேப்பம்பட்டை கஷாயம் செய்து பாட்டிலில் வைத்து குலுக்கி வரும் நுரையை வடு மீது தடவி வர தோல் பழைய நிறம் பெறும்.
- ❖ காலில் முள் குத்திய இடத்தில் முள்ளை எடுத்த பின் வெற்றிலையில் நல்லெண்ணெய் தடவி அனலில் வாட்டி சூட்டோடு வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்தால் வலி பறந்து விடும்.
- ❖ நாவல் பழம் வாயுத்தொல்லை, வயிற்றுப் புண்களை ஆற்ற வல்லது.
- ❖ நல்ல சுண்ணாம்பில்விளக்கெண்ணெய் கலந்து குழப்பி பித்தவெடிப்பு கண்ட இடத்தில் தடவிவந்தால் விரைவில் குணமாகும்.
- ❖ தினமும் 5 ஆவாரம்பூ அல்லது 1 கோவை பழம் சாப்பிட சர்க்கரை நோய் குணமாகும்.




- ❖ கருந்துளசி இலைச்சாறு பிழிந்து இரண்டு வேளை 3 நாட்கள் சாப்பிட்டு வர கபக்கட்டு வெளியேறும்.
- ❖ சௌசௌ சாப்பிடுவதால் எலும்புகளுக்கு உறுதியும், பற்களுக்கு பலமும், ஜீரண சக்தியும்கிடைக்கறது.

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# நமது இதழுக்கு பொருளாதார உதவி தேவைப்படுகிறது

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# பூவுடன் சேர்ந்த நாறும் மணக்கும்

## சகவாசம் பற்றி கண்ணதாசன்

யாரோடு, நீ பேசுகிறாயோ அவனுடைய நடத்தையைப் பொறுத்தே உன் புத்தி செயல்படுகிறது.

பன்றியோடு சேரும் கன்றும் சாக்கடையில் புரளும்.

ஏன், வர்ணங்களில் கூட ஒரு மனோதத்துவம் உண்டு.

கறுப்பு வர்ணத்தையே பார்த்துக் கொண்டு இருப்பவனுக்கு கல்மனம்.

வெள்ளை நிறத்தைப் பார்த்தால் தூய்மை.

பச்சை தயாள சிந்தை.

மஞ்சள் மங்கலமுடையது.

வாசனையிலும் அந்த பேதம் உண்டு.

நறுமண மலர்களை முகரும் போது உன் மனமும், முகமும் பிரகாசிக்கின்றன.

நாற்றத்தை முகரும்போது உனக்கே அருவருப்பு.

அதுவே உனக்குப் பழக்கம் ஆகிவிட்டால், உன்னை பார்க்கும் போதெல்லாம் எதிரிகளுக்கு அருவருப்பு.

சகவாச தோஷமும் இது தான்.

நான் பன்னிரண்டு வயதில் தமிழ் வித்துவான் பரீட்சையில் புகுமுக வகுப்பு எழுதினேன்.

அப்போது அமராவதி புதூர் குருகுலத்தில் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன் அங்கேயே வித்துவான் பட்டப்படிப்புத் தொடங்கினார்கள். அப்போது வித்துவான் பட்டப்படிப்புக்கு இவ்வளவு ஆங்கிலப் படிப்பு வேண்டும் என்ற விதிமுறை இல்லை.

முதல் வருடம் 'என்ட்ரன்ஸ்' பாஸ் செய்தேன். அப்போது எனக்கு தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர் இராமநாதபுரம் வித்துவான் ராமசாமி பிள்ளை. அவரது எளிய தோற்றம் என்னை கவர்ந்தது.

அத்தோடு நான் கிராமத்துக்கு வந்து விட்டேன்.

வித்வான் படிப்பை தொடர வேண்டும் போல் தோன்றிற்று.

பக்கத்து ஊரான கீழ்ச்செவல்பட்டியில் இருந்த வித்துவான் முத்துகிருஷ்ணன் ஐயரிடம் தினமும் நான்கு மைல்கள் நடந்து போய்த் தமிழ் இலக்கியம் கற்றுக் கொண்டேன். அதையும் முழுமையாக கற்கவில்லை.

குருகுலத்திலும், பிறகு சென்னைக்கு வந்ததும், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களிடம் தான் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன்.

குருகுலத்தில் நான் படித்த போது அவர் தான் தலைமை ஆசிரியர். அவர்களிடம் நான் பாடம் கற்றுக்கொண்டேன்; பழகியும் வந்தேன். அந்த பழக்கத்தில் தான் எனக்கு பணிவு ஏற்பட்டது.

புதுக்கோட்டை, ராயவரத்தில் ஒரு பத்திரிக் கையில் நான் ஆசிரியராக இருந்த போது, சில நண்பர்களின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. அந்த தொடர்பில்தான் மதுப்பழக்கம் ஆரம்பமாயிற்று.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் திருமுருக கிருபானந்த வாரியாரின் தொடர்பு ஏற்பட்டது.



திடீரென்று அவர் எனக்கு ஒரு நாள் டெலிபோன் செய்து, ஒரு திருக்குளத் திருப்பணிக்காக என்னைப் பார்க்க வருவதாகச் சொன்னார்.

நான் உடனே 'சுவாமி நீங்கள் வர வேண்டாம்; நானே வருகிறேன்' என்று கூறி ஒரு நண்பரிடம் ரூபாய் 5000 கடன் வாங்கிக் கொண்டு நேரே சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்றேன்.

அவர் காலைத் தொட்டு வணங்கி, அந்த பணத்தைக் கொடுத்தேன்.

பிறகு அவர் சொற்பொழிவுகளைக் கேட்க ஆரம்பித்தேன். அதிலிருந்து என் போக்கே மாறிவிட்டது.

1949–இல் நாத்திக நண்பர்களின் சகவாசத்தால் நாத்திகனானவன். வாரியார் சுவாமிகளின் சகவாசத்தால் 'அர்த்தமுள்ள இந்துமதம்' எழுதத் தொடங்கினேன்.

இன்று எனக்கே நான் சிறந்தவனாகக் காட்சி அளிக்கிறேன்.

கவியரசர் கண்ணதாசன் அவர்களின் 'அர்த்தமுள்ள இந்துமதம்' நான்காம் பாகத்தில் இருந்து...

# சங்குநாதம் இசைக்கும் கல்லூரி மாணவர்

சிவன் கோவில் முழுவதும் சென்று சங்குநாதம் இசைத்து சிவதொண்டு செய்கிறார். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகைஆற்று கரையில் உள்ள பூக்கொல்லை பகுதியில் வசித்து வரும் கல்லூரி மாணவர் ஆனந்த்.

இவர் அதிகாலை 4மணிக்கு எழுந்து மானாமதுரையில் உள்ள ஆனந்தவல்லி சோம நாதர்கோவில், சிருங்கேரிசங்கரமடம் மற்றும் தமிழகத்தில் உள்ள பல சிவாலயங்களுக்கு சென்று சிவனுக்கு பிடித்த சங்குநாதம், உடுக்கை இசைத்து வருகிறார்.

கோவில்களில் உழவாரபணி செய்தும் மரகன்றுகள் நட்டு வருவதுடன், பல்வேறு கோவில்களில்சென்று சிவனடியார்களை சந்தித்து ருத்ராச்சை மற்றும் விபுதியை தேவை படுபவர்களுக்கு இலவசமாக பெற்று தருகிறார்.

இவர் மிகுந்த சிந்தையுடன் சிவத்தொண்டு செய்துவருவதாக ஆன்மிக அன்பர்கள் பாராட்டுகின்றனர்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182









# சிவனை தவிர வேறில்லை வீர சைவர்களின் வீர வாதம்

இந்து மத வரலாற்றில் சிந்தனை போக்கை ஆராய புகுந்த நாம் வேதங்களுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து நமது மத கோட்பாடு உருவானது எனவும் இன்று வரை பல்வேறுப்பட்ட மாறுபாடுகளை தனக்குள் கொண்டு வளர்ந்து வருவதையும் ஓரளவு ஆராய்ந்தோம். நமது வழிபாட்டு முறையில் உள்ள முக்கிய பிரிவான சைவ சமயத்தின் சித்தாந்தம் காஷ்மீர சைவம் போன்றவைகளையும் ஆராய்ந்தோம். இனி சிவசிந்தனை மரபில் மிக குறிப்பிடதக்க ஒன்றாக இருக்கும் வீரசைவம் என்ற பிரிவை ஆராய்வோம்.

**கடவுள் உருவாக்கிய மதம்**

சைவம் என்றால் ஒளி, சைவம் என்றால் சிவம், சைவம் என்றால் சாந்தி என்பது தான் நமக்கு தெரியும். ஆனால் இங்கு வீர சைவம் என்ற வார்த்தையை பயன்படுத்திய உடனேயே இது ஏதாவது மற்ற மதங்களை தாக்குவதற்காக உருவாக்கப்பட்ட சண்டைகார மதபிரிவோ என்று யாரும் எண்ண வேண்டாம். உண்மையில் இங்கு பயன்படுத்தப்படும் வீர என்ற வார்த்தைக்கும் சண்டைக்கும் சம்பந்தமே இல்லை. அப்படியென்றால் வீரசைவம் என்பது என்ன பொருளுடைய வார்த்தை என நீங்கள்சிந்திக்கலாம்.

வீரசைவ மத பிரிவை சார்ந்த எனது நண்பர் ஒருவர் இதற்கு விளக்கம் தந்தார். சிவனை தவிர வேறு எவனையும் நாங்கள் வணங்க மாட்டோம். சிவாகமங்கள் தவிர வேறு எதையும் நாங்கள் படிக்க மாட்டோம். சிவனடியாரை தவிர வேறு எவரையும் நாங்கள் அடியார் என ஏற்று கொள்ள மாட்டோம்.

இதில் நாங்கள் உறுதியாக இருப்பதினால் அந்த உறுதி எங்கள் இதயத்தை வீரம் பொருந்தியதாக மாற்றிவிட்டதினால் தான் நாங்கள் பின்பற்றும் சமயத்திற்கு வீரசைவம் என்ற பெயர் வந்தது என்றார்.

அவரை பார்ப்பதற்கு எனக்கு பரிதாபமாக இருந்தது, சைவநெறியின் மீது அவர் கொண்ட பற்றுதல் பாராட்டுதலுக் குரியது என்றாலும் அவர் பற்றுதலின் உள்ளீடாகமறைந்து கிடப்பது தனது மதம் தான் உயர்ந்ததுஎன்ற ஆணவம் என்பதை அறியும் போது கோபம் ஏற்படாமல் பரிதாபம் வருவதற்கு காரணம் உண்டு.

கிணற்றுக்குள்ளேயே வாழ்ந்து பழக்கப்பட்ட






www.aanmeegamalar.com

தவளை கிணற்றை விட சமுத்திரம் பெரியதானது என்று சொன்னால் பித்த லாட்டமாக பேசாதே என்று சண்டைக்கு வருமாம். அதே போலத்தான் பல மனிதர்களும் இருக்கிறார்கள் தாங்கள் பார்த்த காட்சி மட்டுமே நிஜமானது. தாங்கள் கேட்ட சப்தம் மட்டுமே உண்மையானது.

தான் நடக்கும் வழிமட்டுமே நேர்மை யானது என்று அடம் பிடிக்கிறார்கள். இப்படிப்பட்ட மனோபாவம் கொண்டவர் களால் மட்டும் தான் பல பிரச்சனைகள் தலை தூக்குகின்றன.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

உண்மையில் மகாவீரர் என்ற பெயருக்கு போர்க்களம் என்பது எப்படி சம்பந்தமே இல்லையோ அப்படித்தான் வீர சைவம் என்பதற்கு மற்ற மதத்தை மறுத்தல் என்பது சம்பந்தம் இல்லை. வீரசைவம் என்ற வார்த்தைக்கும் கடவுளான சிவனையும் மற்ற ஜீவன்களையும் சமமாக பாவித்தல் என்றே சைவ ஆகமங்களும் சித்தாந்த சிகாமணி என்ற நூலும் பொருள் தருகிறது.

பல மொழியியல் வல்லுநர்கள் வீ என்ற முதல் எழுத்து சிவனை குறிப்பதாகவும் ர என்ற இரண்டாம் எழுத்த ஜீவனை குறிப்பதாகவும் விளக்கம் தருகிறார்கள். இதற்கு தத்துவார்த்த ரீதியில் வேறொரு பொருளும் சுட்டி காட்டப்படுகிறது. ஐந்து புலன்களை வெல்வதே நிஜமான வீரம் அப்படி புலன்களை வெல்லும் மார்கத்தை இந்த சைவமார்க்கம் எளிமையாக எடுத்து சொல்வதினால் வீர சைவம் என்ற பெயர் பெற்றதாக கூறப்படுகிறது.

சிவ வழிபாடு என்பது அனாதிகாலம் தொட்டு நடைமுறையில் இருந்தாலும் சைவசமய தத்துவங்கள் பிற்காலத்திலேயே முழுவடிவம் பெற்றது. அதன் அடிப்படையில் வீர சைவ நெறியும் உருவானது என்றாலும் அது எப்போது முதல் மக்களின் நடைமுறை வாழ்க்கைக்கு வந்தது என்பதை சொல்ல சரியான காலகெடு இது வரை யாருக்கும் தெரியாது. அதே போலவே இந்த நெறியை இன்னாத்தான் உருவாக்கினார் என்று திட்டவட்டமாக கூற இயலாது




இருந்தாலும் ஞானி பசவண்ணரே இதை தோற்றுவித்தார் என்று பலரும் நம்புகிறார்கள். பசவண்ணருக்கு காலத்தால் முற்பட்ட யோகி ராமையா என்பவர் இதை உருவாக்கினார் எனசொல்வாரும் உண்டு. இதற்கு ஆதாரமாக கதம்ப நாட்டு அரசன் காமதேவன் தார்வார் பகுதியை சார்ந்த சோமேஸ்வரன் கோவிலில் உள்ள கல்வெட்டு சுட்டிகாட்டப்படுகிறது.

இந்த கல்வெட்டில் யோகி ராமையா ஜைன மத துறவிகளோடு வாதப்போர் செய்து தோற்று போனதாகவிம் அதனால் தன் தலையை தானே துண்டித்து கொண்டதாகவும் ஆனால் சிவபெருமான் அவருக்கு




மீண்டும் உயிர் தந்ததாகவும் இதனை அறிந்த பிஜ்ஜலன் என்ற அரசன் பாராட்டி விருந்தளித்து பல கிராமங்களை நிவந்தமாக அளித்தாகவும் எழுதப்பட்டு இருக்கிறது.

மேலும் பசவபுராணம் என்ற நூல் சிவபெருமானின் அகோரம், தத்புருஷம், சத்யோஜாதம், வாமதேவம், ஈசானம் ஆகிய ஐந்து முகங்களில் இருந்து ஏகோராமா் பண்டித ராத்லாரா், இரேவனா், முரலா், விஸ்வராத்யாயா் ஆகிய ஐந்து ஞானி பசவண்ணருக்கு முற்பட்டே தோன்றி வீர சைவ நெறி இருந்து வருகிறது என்பதை வரலாற்று நோக்கிலும் புராண அடிப்படையிலும் நிலை நிறுத்தப்படுகிறது.

ஆனாலும் கூட பசவண்ணரே வீர சைவ நெறிக்கு முழுவடிவம் கொடுத்தவா் என்பதை மறுப்பதற்கு இல்லை, பசவண்ணா் பிராமணராக பிறந்தாலும் கூட பிராமணா்களுக்கான வைதீக நெறிகள் எவற்றையும் ஏற்று கொண்டது இல்லை முழுக்க முழுக்க சிவ நெறிக்கு உட்பட்ட வீரசைவ நெறியையே தனது வாழ்நாள் முழுவதும் பின்பற்றினாா்.

வீர சைவ நெறியை பின்பற்றுபவா்களை லிங்கா யதா் என்று அழைக்கிறாா்கள் அதாவது இதற்கு லிங்க உடம்பினா் என்று பொருள் சொல் லலாம் தனது உடலின் ஒரு பகுதியாக சிவலிங்கத்தை இவா்கள் எப்போதும் வைத்திருப்பதினால் அதாவது இவா்க ளின் மேனி சிவத்திரு மேனியை எப் போதும் தாங்குவதினால் லிங்காயதா் என பெயா் பெற்றனா் எனலாம் வீர சைவா்களுக்கு லிங்காசாரம் என்ற லிங்க ஒழுக்கம், சாதசாரம் என்ற தன்னிலை ஒழுக்கம் சிவாசாரம் என்ற சிவ ஒழுக்கம் விருத்யா சாரம் என்ற பணி ஒழுக்கம், கானாசாரம் என்ற சமுக ஒழுக்கம் ஆகிய ஐந்துவகை ஒழுக்கங்கள் வலியுறுத்தப்படுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும் போன்: 09442426434

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்






சிகப்பு நிற மலரால் வழிபட்டால்

# கண், இருதய நோய் குணமாக்கும் சிவன் கடன் பிரச்சனைகளை தீர்க்கும் அம்மன்




திருக்கழுக்குன்றத்திலிருந்து மதுராந்தகம் செல்லும் சாலையில் ஈசூர். பூதூர், கீழவலம் அடுத்து அமைந்துள்ளது அரையப்பாக்கம்கிராமம்.

பல்லவர்காலத்தில் அமைக்கப்பட்டு சிறப்பாக பூஜைகள் நடைபெற்று வந்த இந்த அரையப்பாக்கம் ஆலயம் பிற்காலத்தில் ஏனோ சிதிலமடைந்து கவனிப்பார் இன்றி இருந்துள்ளது. சில வருடங் களுக்கு முன்னர் இங்குள்ள முட்புதர்களை அகற்றிய சமயம் லிங்கம் வெளிப்பட்டுள்ளது.

அதன்பிறகு பிற சிலைகளும் கிடைத்துள்ளன. கடந்த 2014 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள் ளது. தலம் தீர்த்தம் மூர்த்தி ஆகிய மூன்றும் அமைந்த தலமாகும்.

**கோயிலின் அமைப்பு:**

மேற்கு கோபுரம் வழியாக ஆலயத்திற்கு நுழைய வேண்டும். கருவரை கோபுரம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஆலயத்திற்கு கிழக்கு பக்கம் ஆலயத்திற்கான கிணறும் மேற்கு பக்கம் பெரிய குளமும் அமைந்துள்ளது. கோயிலினை சுற்றி வயல்கள் அமைந்துள்ளது. கருவரையில் ஸ்ரீ அருணாதீஸ்வரர் பெருமான் மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரியதாக கருணையோடு



அருள்பாலிக்கின்றார்.

தெற்கு பக்கம் அம்பிகை ஆலயம் அமைந்துள்ளது. ஸ்ரீஅருணாம்பிகை அபயம், ஹஸ்தம், வரத முத்திரையுடன் வீற்றிருந்து பெருங் கருணையுடன் நமக்கு அருள்பாலிக்கின்றார். அம்மன் சன்னதிக்கு எதிரில் மதில் சுவரில் சிறிய துவாரம் அமைந்துள்ளது. கோயிலின் வலப்பக்கம் நாகதேவதைகள் அமைந்துள்ளது.


வேலன்

வடகிழக்கு பகுதியில் பைரவர் சன்னதியும் நவக்கிரக சன்னதியும் அமைந்துள்ளது. வெளிப்புற திருக்கோட்டங்களில் ஸ்ரீநர்த்தன கணபதியும், ஸ்ரீ தட்சணாமூர்த்தியும், ஸ்ரீவிஷ்ணு, பிரம்மா, துர்க்கையம்மன் சிலைகளும் அமைந்துள்ளன.

கோயிலின் பின்புறம் ஜோஸ்டா தேவி சிலை புடைப்பு சிற்பமாக அமைந்துள்ளது. சிற்பத்தின் இரண்டு புறங்களிலும் சேடிப்பெண்கள் நின்ற கோலத்தில் உள்ளனர். ஏர்கலப்பை ஒரு புறமும், கழுகுக்கொடி மறுபுறமும் அமைப் பெற்றுள்ளது. நால்வர் சன்னதியும் தெற்கு புறத்தில் வடக்குதிசை பார்த்தவாறு அமைந்துள்ளது.

## கோயிலின் சிறப்புகள்

அதிகாலையில் சூரியகதிர்கள் சிவபெருமானின் உடல்முழுவதும் விழும். இங்குள்ள அருணதீர்த்தத் தில் நீராடிவிட்டு அதிகாலையில் சூரிய தரிசனம் பார்த்தால் மனக் கவலைகள் நோய்கள் வேண்டுதல்கள் மற்றும் அனைத்துப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடும். கோயிலின் வெளிப்புறம் அமைந்துள்ள கிராம தேவதைகள் ஊரினை பாதுகாக் கின்றன.




இந்த திருத்தலம் சூரியனால் ஆராதிக்கப்பட்ட திருத்தலம். ஆதலால் காயத்திரியின் அம்சமும் பிராம்மாஸ்திர மந்திரத்தின் அம்சமும் ஒருசேர சாந்தித்யம் கொண்ட சிறப்பு வாய்ந்த ஷேத்திரம் ஆகும்.

ஊருக்கு மழைவேண்டின் இங்குள்ள குளக் கரையின் ஓரத்தில் துர்கையம்மனை உரலில் அமர்த்தி அம்மனை நீரால் அபிஷேகம் செய் தால் தேவையான மழை இங்கு பெய்யும்.

## ஆலய பூஜைகள்:

இங்கு பிரதோஷம், சஷ்டி, கிருத்திகை, சங்கட சதூர்த்தி, அஷ்டமி, பௌர்ணமி விளக்கு பூஜை, சனிக்கிழமைகளில் சனீஸ்வரர் வழிபாடு, விஷ்ணு வழிபாடு, வியாழக்கிழமைகளில் தட்சணமூர்த்தி வழிபாடு, நாகதோஷ வழிபாடு செய்யப்படுகின்றது.

இங்குள்ள ஈசனை சிகப்பு நிறம் கொண்ட மலர்களால் வழிபாட்டால் கண் சம்பந்தப்பட்ட நோய்களும் இதய நோயும் குணமாகும்.

மேலும் இங்குள்ள அம்மனை சிகப்பு நிற மலரால் வழிபட்டால் கடன் பிரச்சனை தீரும். சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்வது வழக்கமாக உள்ளது. இங்குள்ள தீர்த்தம் அருணா தீர்த்தம். தலத்தின் விருட்சம் – எருக்கு.

நேரம் கிடைக்கும் சமயம் ஆலயத்திற்கு சென்று வாருங்கள்.ஆலய தொடர்புக்கு: 7708288856

– வேலன்,

போன்: 9894836096 திருக்கழுக்குன்றம்.



# வாழ்க்கையின் நோக்கம் ஆனந்தத்தை அடைவதே




அன்பு குருதேவர் அருளுகிறார்: “நமது வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்கள் அனைத்தின் மூலமாக இறைவன், அவனது ஆனந்தம், அவனது அருட்கிளர்ச்சி, உண்மையான வாழ்வு உண்மையான ஞானம், உண்மையான மகிழ்ச்சி, உண்மையான புரிந்துகொள்ளும் தன்மை ஆகியவற்றை தனது எல்லையற்ற கருணையின் காரணமாக நமக்குத் தந்தருளுகின்றான்.

ஆனால், இறைவனுடைய மகிமை ஆன்மாவின் அமைதியிலும் அவனுடன் ஆழ்ந்த தொடர்புகொள்ளவேண்டுமென்ற மனதின் அகமுக முயற்சியின் தீவிரத்திலும் மட்டுமே வெளியாகின்றது. அங்கேதான் நாம் உண்மையைக் காண்கிறோம். வெளிப்புறத்தில் மாயை அதிக வலிமையுள்ளதாக இருக்கிறது. வெளிப்புறச் சூழலின் பாதிப்புகளிலிருந்து மிகச்சிலரே விடுபடமுடியும். முடிவற்ற சிக்கல்களுடனும் விதவிதமான அனுபவங்களுடனும் உலகம் தொடர்ந்து செல்கின்றது. ஒவ்வொரு வாழ்வும் புதியது. மேலும் ஒவ்வொரு வாழ்வையும் வெவ்வேறு விதமாக வாழவேண்டியுள்ளது. இருந்தாலும் எல்லா வாழ்விற்கும் அடித்தளமாக இருக்கும் இறைவனின் மௌனக்குரல் நம்மை, மலர்கள் மூலமாகவும், சாத்திரங்கள் மூலமாகவும், நமது மனச்சாட்சி மூலமாகவும் அழகாக இருப்பவை மற்றும் வாழ்க்கையை வாழத்தக்கதாக்கும் அனைத்தின் மூலமாகவும் சதா அழைத்தவண்ணம் உள்ளது.”

“எவ்வளவு அதிகமாக நீங்கள் புறத்தே கவனம் செலுத்துகின்றீர்களோ அவ்வளவு குறைவாக மெய்ப்பொருளின் என்றும் நீடித்திருக்கும் ஆனந்தத்தின் அக மகிமையை அறிவீர்கள். அகத்துள் நீங்கள் அதிக கவனம் செலுத்தும்போது, புறத்தே இருந்துவரும் இடுக்கண்கள் வெகுவாக குறையும். ஆனால் உலக சகவாசம் மற்றும் சுற்றுச்சூழலின் தாக்கங்களாலும், தீய பழக்கங்களாலும் பெரும்பாலான மக்கள் இந்த உண்மையைப் புரிந்துகொள்வதில்லை. சுற்றுச்சூழல் உங்களை ஏறக்குறைய கவர்ந்துவிடுகின்றது; அது ஆழ்ந்த உண்மைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு உங்களை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. என்ஸினிடஸ் ல் உள்ள இந்த அழகான இடத்தில்கூட ஆன்மீக வளர்ச்சியை நாடும் தூய நோக்கம் இல்லாது சில மாணவர்கள் வந்திருப்பதை நான் கண்டுள்ளேன். இறைவனை நீங்கள் காணவேண்டுமென்று விரும்பிவிட்டால், அவனை நீங்கள் எங்கும் காணமுடியும். பழக்கங்கள் கொல்லும் தன்மை வாய்ந்தவை; அவை அழித்துவிடும். உங்களிடம் உள்ளதை வைத்து நீங்கள்

123
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

மகிழ்ச்சியுடன் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். உங்களிடம் ஏற்கனவே வருவதைவிட அதிகமாக வேறு எதனையும் விரும்பாதீர்கள். உங்களுக்கு என்ன தேவையென்பது தெய்வத் தந்தைக்குத் தெரியும்.”

“முடிவின்றி மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு மிகச் சிறந்த மார்க்கம் இறை உணர்வுடன் இருப்பதாகும். இறை – அனுபூதிதான் உங்களுடைய அதிமுக்கியமான விருப்பமாக இருக்கவேண்டும்; அவனுடன் இருக்க வேண்டும் என்ற தீர்மானமே உங்களுடைய உணர்வில் முதலானதாக இருக்க வேண்டும்”

மேலும் அவர் கூறுகிறார்: “நான் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டேன். இன்னும் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை. மேலும் இறைவனைக் காண்பதே வாழ்வின் ஒரே நோக்கம் என்பதை நான் ஏற்கனவே உணர்ந்துள்ளேன். இறைவனைக் காண்பதே வாழ்க்கையின் நோக்கம் என்பதில் அநேகருக்கு சந்தேகம் இருக்கலாம். ஆனால் வாழ்க்கையின் நோக்கம் ஆனந்தத்தை அடைவதே என்ற கருத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள முடியும். இறைவன் பேரின்பம் என நான் கூறுகிறேன். அவன் பேரருள். அவன் பேரன்பு. உங்களுடைய ஆன்மாவினின்றும் என்றுமே விலகாத பேரானந்தம் அவன். ஆகவே அந்தப் பேரின்பத்தை அடைய நீங்கள் ஏன் முயலக்கூடாது? அதை வேறு எவரும் உங்களுக்குத் தர இயலாது. அதை நீங்களே தொடர்ச்சியாகப் பேணி வளர்க்க வேண்டும். இயற்கையின் சக்திகள் உலக இன்பங்களை உங்களுக்கு இடைவிடாமல் கொடுக்க முயல்கின்றன; ஆனால் இந்த நிலையற்ற நிறைவுகள் துன்பத்திலும் கசப்புணர்விலும் மட்டுமே முடிவுறுகின்றன. சலுகைகள் பல பெற்ற ஒரு மனிதனும் கூட எல்லாவற்றையும் பெற்றவர்போல் தோன்றினாலும், மகிழ்ச்சி இல்லாமல் இருக்கலாம். உலகப்பொருட்களால் நீங்கள் ஒருபோதும் நீடித்த திருப்தியை அடைய மாட்டீர்கள். அவை பொய்யான அமைதியையும் மனநிறைவையும் மட்டும் அளிக்கின்றன. பேராசைகளினால் முழு உலகமுமே பெரும் குழப்பத்திற்குள் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. பேராசை யுத்தத்தை உண்டாக்குகிறது. வேறொன்றும் அதை உண்டாக்கவில்லை.”

“இந்த வாழ்க்கைப் போரில் தன்னையே வெற்றி கொள்பவனே மாபெரும் வெற்றியாளன். இந்த லட்சியத்திற்கு எதிராகச் செயல்படும் அனைத்தும் – பணம், புகழ். ஆசைகள் – நமது அமைதிக்கும் சந்தோஷத்திற்கும் ஒரு கேடு ஆகும். வாழ்க்கையின் உண்மையான மதிப்பீடுகள்மீது மன ஒருமுகப்பட மக்கள் கற்றுக் கொண்டால், அவர்கள் உண்மையான சந்தோஷத்தைக் காண்பர்; ஆனால் அவர்கள் உலக ஆசைகளால் திசை திருப்பப்படுகின்றனர். நான் தேர்ந்தெடுத்துள்ள மார்க்கத்திலிருந்து எந்த ஒரு சபலமும் என்னை திசை திருப்ப முடியாது என்பதைக் காண்கிறேன். இறைவன் எனக்கு அளித்துள்ள வல்லமையின் மூலம் நான் ஆயிரக்கணக்கானோரை வசப்படுத்த முடியும். ஆனால் அந்த வழி எனக்கு நன்மை பயக்காது. எவ்வாறாயினும் ஆயிரக்கணக்கானோரை வசப்படுத்துவதை நான் விரும்பவில்லை. இறைவனில் தங்களை நிலை நிறுத்தியுள்ள உண்மையான பக்தர்களைக் காண நான் விரும்புகிறேன். இறைவனை நேசிக்கும் ஆன்மாக்கள் இங்கு வருவார்கள். மேலும் வாழ்க்கையின் இறுதிவரை எவரின் உற்சாகம் நீடிக்குமோ அவரே அவனைக் காண்பர்”

அன்பு குருதேவரின் மேற்கண்ட போதனைகளுக்கு உதாரணமாக ‘இறைவனுக்கு நெருக்கமானவர்’ என்ற தலைப்பிலுள்ள ஒரு கதையை இங்கே குறிப்பிட



விரும்புகிறேன்.

"துறவி ஒருவர் சொற்பொழிவு செய்து கொண் டிருந்தார். அங்கே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. தட்டுத்தடுமாறி அங்கு வந்த கண்பார்வையற்ற பெண் ஒருவர் துறவியிடம் நெருங்கினாள். அவரைப்பார்த்து, " துறவியாரே! பார்வையற்றவளாகிய என்னால் இறைவன் மகிழும் வண்ணம் வாழ்க்கை நடத்த முடியுமா?" என்று கேட்டாள். குரலில் அன்பொழுக அவர், "பெண்ணே! உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் சொல். நடிப்புப் போட்டி ஒன்று நடக்கிறது. அதில் ஒருவன் அரசன் வேடம் போட்டு வருகிறான். இன்னொருவன் பிச்சைக்காரன் வேடம் போட்டு வருகிறான். மற்றொருவன் பைத்தியக்காரன்போல் வேடமிட்டு வருகிறான். இப்படியே பல வேடங்களில் பலர் வருகின்றனர். யாருக்குப் பரிசு கிடைக்கும்? அரசன் வேடம் போட்டவனுக்கா? அல்லது பிச்சைக்காரன் வேடம் போட்டவனுக்கா? அல்லது வேறு யாருக்காவதா?" என்று கேட்டார்.

"யார், தான் ஏற்றிருக்கின்ற வேடத்தில் மிகச்சிறப்பாக நடிக்கின்றனரோ அவருக்கே பரிசு கிடைக்கும்" என்று பதில் தந்தாள் அவள். "நன்றாகச் சொன்னாய்" என்ற அவர் அதேபோல்த்தான் இந்த உலக வாழ்க்கையிலும் பலருக்குப் பல வேடம் தரப்பட்டுள்ளது. எனக்குத் துறவி வேடமும் உனக்குப் பார்வையற்றவள் வேடமும் கிடைத்துள்ளன. யார் தமக்குக் கிடைத்த வாழ்க்கையை சிறப்பாக நடிக்கின்றனரோ அவர்களே, இறைவனுக்கு விருப்பமானவர் ஆவார், " என்றார். இதைக் கேட்ட அந்தப் பெண் மகிழ்ச்சி அடைந்தாள்.



குருப்ரியா

எவ்வாறான வாழ்க்கை நமக்கு கிடைத் தாலும் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு வாழ்வதே சிறப்பாகும். ஏனென்றால் இறைவன் எங்கும் எதிலும் நிறைந்துள்ளான். எல்லா இன்பமும் இறைவனில் உள்ளது என்கிறார் குருதேவர். நமக்கு துன்பம் நேர்ந்தாலும் அதை இன்பமாக நினைத்து இறைவனுக்காக வாழ்வதுதான். இறைவிதியும் அதுவே. இறைவிதிகளை மீறாமலும் அனைத்தையும் இறைவனுக்குச் சமர்ப்பணம் செய்தும் வாழ்வதே உத்தமமாகும். இவ்வாறான வாழ்க்கையைக் கண்டு இறைவன் மிகவும் மகிழ்வான். இன்பமும் துன்பமும் எல்லாம் இறைவன்தான். அனைத்திற்கும் 'கர்த்தா' அவன்தான் என்பதை நினைவில்கொள்ளவேண்டும். இவ்வாறு நினைப்பவர்களுக்கு எவ்விதத்திலும் பயமில்லை. அதனால் இறைவனும் உடனிருப்பான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# இயற்கை மருத்துவம்

- நல்லெண்ணெயில் வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், கற்பூரம் போட்டு காய்ச்சி தினசரி 3 வேளை இரண்டு சொட்டு விட்டு வர காதுவலி குணமாகும்.
- வெற்றிலையை நறுக்கி தேங்காயெண் ணெயில் காய்ச்சி சிவந்தவுடன் இறக்கி ஆற வைத்துக்கொள்ளவும். காலை, மாலை இரண்டு சொட்டு காதில் விட்டு வர காதில் சீழ் வடிதல் நின்று போகும்.
- கண்ணாடித்துண்டால் காயம் ஏற்பட்டால் வாழைப்பழத்தோலை அந்த காயத்தின் மீது வைத்துக்கட்ட ரத்த போக்கு நின்று காயம் விரைவில் ஆறும்.
- வெந்தயத்தை வேக வைத்து தேன் விட்டு பிசைந்து கூழாக்கி உட்கொள்ள மார்பு வலி குணமாகும்.
- பேர்ரத்தை, நிலவேம்பு சம அளவு சேர்த்து அரைத்து நீரில் சுண்ட காய்ச்சி காலை, மாலை குடித்து வர குளிர் காய்ச்சல் குண மாகும்.
- அதிமூத்திரம், நீர்த்தடை, வயிற்று எரிச்சல், உடம்பு குடைச்சல், வாதம், சுவாசக்காசம், கபநோய், இருமல் ஆகியவற்றிற்கு முள் ளங்கி நல்லது.
- திப்பிலி, சுக்கு, எள் மூன்றையும் சம அளவு எடுத்து இடித்து தூள் செய்து ஒரு நாளைக்கு மூன்று வேளை தேனுடன் சாப் பிட்டு வர மூல நோய் குணமாகும். மூல நோய்க்கு துத்திக்காய் மிகவும் நல்லது.
- இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் மாம் பழம் சாப்பிடுவது நல்லது.








# தீராத துன்பங்களிலிருந்து விடுவிக்கும் ஸ்ரீ தீர்க்காசலேஸ்வரர்

பழம்பெருமை வாய்ந்த நம் திராவிட தேசத்தில் புகழ்பெற்ற திருத்தலங்கள் எண்ணற்றவை. அவற்றுள் கிளிமுகம் கொண்ட சுகபிரம்மமகரிஷி வழிபட்ட சிறப்பு வாய்ந்தத் தலமே தீர்க்காசலம். தமிழில் இப்பதியை நெடுங்குன்றம் என்று கூறுவர். தற்போது இந்த ஊர் நெடுங்குணம் என்று அழைக்கப்படுகிறது. தேவலோக மங்கையர்களான 12 அப்சரஸ் களில் ஒருவள் கிருதாசி. இவள் கிளி உருவம் கொண்டு வியாச மகரிஷியுடன் இணைந்தபோது, கிளி முகத்துடன் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையை சுகப்பிரம்மரிஷி [சுகம்=கிளி] ஆவார். இவரை சுகர் என்றும் அழைப்பர். பிறவியிலேயே சிறந்த ஞானியாக திகழ்ந்தார் சுகர்.

ஒரு சமயம் இவர் திருவண்ணாமலைக்கு வடகிழக்கில் திகழும் தீர்க்காசலம் என்னும் நெடுங்குன்றத்தை அடைந்தார். சிவனே நெடு மலையாகத் திகழ்வதை உணர்ந்த சுகர், அங்கே ஆசிரமம் அமைத்து, நெடுமலையின் உச்சியில் அமர்ந்து ஈசனை எண்ணி கடுந்தவம் புரிந்தார். தவத்தில் மகிழ்ந்த ஈசன், சுகப்பிரம்ம ரிஷிக்கு காட்சி தந்து, வேண்டும் வரத்தினைக் கேட்டார்?? சுகரோ தனக்கு முத்திபேறு வேண்டும் என விரும்பி நின்றார்.

அவரின் வேண்டுகோளை ஏற்ற எம்பெருமான், "அக்கிரமங்களை அழிக்க அவதரித்த ஸ்ரீ இராம








பிரான், இராவணனை அழித்து, சீதையை மீட்டு, தம்பி லட்சுமணரோடு இந்த தீர்க்காசலம் வழியாக வருவார். அவ்வாறு வருகையில் மலை வடிவாக இருக்கும் என்னை தரிசிப்பார்கள். அப்போது நான் உனக்கு தரும் வேத சுவடியை ஸ்ரீ இராமரிடம் சேர்க்க வேண்டும். பின் ஜனக மகரிஷியிடம் சென்று ஞான உபதேசம் பெற்று, நிறைவாக சூரிய மண்டலத்தை அடைந்து, முக்தி அடைவாய்" என திருவாய் மொழிந்து, வேத சுவடியை சுகப்பிரம்மரிடம் தந்தருளினார்.

ஈசனின் திருமலரடி பணிந்து, சுவடியை பெற்றார் சுகர். மேலும் ஈசன்...."நீ தங்கி, தவம் புரிந்த இந்த (நெடுங்குன்றம்) தீர்க்காசலம் சுகரிஷி பர்வதம் [கிளிமலை] என்று அழைக்கப்படும் என திருவாய் மலர்ந்தார்.

நெகிழ்ந்த சுகமகரிஷி, தாங்கள் இங்கு தீர்க்காசலேஸ்வரராக கோவில் கொண்டெழுந்து, வழிபடும் பக்தர்களுக்கு அவர்களது வாழ்வில் எல்லா நலன்களும் செழித்திட அருள் செய்ய வேண்டுமெனப் பணிந்தார். அதன்படியே திருவருள் புரிந்து மறைந்தார் மகாதேவவர். ஸ்ரீ இராமச்சந்திரரின் வருகையை எதிர்நோக்கி, மீண்டும் தவத்தில் மூழ்கினார் தபோரிஷி.

சில காலம் நகர்ந்தது. பின்னொரு நாள் இராவணனை அழித்து, இலங்கையில் இருந்து தம்பி லட்சுமணன் மற்றும் சீதாபிராட்டியுடன் அயோத்தியா திரும்பினார் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்திகள். அப்போது இங்கு நெடுங்குன்றம் வழியாக வருகையில் பர்வதமாகத் திகழும் பரமேஸ்வரரை வணங்கினார்.

ஸ்ரீ இராமரின் வரவினை எதிர்பார்த்து தவத்தில் ஆழ்ந்திருந்த சுகபிரம்மரிஷியின் ஆசிரமம் அடைந்து, அவரது திருவடிகளை வணங்கி நின்றார் ஸ்ரீ ஜானகிராமர். ஆசி வழங்கிய சுகர், ஈசன் தனக்களித்த வேதச் சுவடியை இராம பிரானிடம் அளித்தார். அதைப் பணிந்து பெற்றார் ஸ்ரீதசரத புத்திரர்.

சுகப்பிரம்மரிஷி.... "ஸ்ரீராமா, சிவபெருமான் இங்கு எழுந்தருளியிருப்பது போல, தாங்களும் இங்கு எழுந்தருளி, மக்கள் நலமுடன் வாழ வேதத்தினை வாசிக்க வேண்டினார்.

நறுமணம் வீசும் துளசி மார்பும், திரண்டத் தோள்களும், சிவந்த மாணிக்கம் போன்ற கழுத்தும், பவளமென மிளிரும் செவ்விதழும், பாரிஜாத மலர் போன்று மலர்ந்தத் திருமுகமும், ஒளிப் பிழம்பாய் திகழும் திருமேனி கொண்டவராக பத்மாசனத்தில் அமர்ந்து, இடது கரம் இடப்பக்க முழங்கால் மேல் படிய, வலக்கரம் ஞான முத்திரை காட்டி மார்மீது வைத்தவண்ணம், தம்பி லக்ஷ்மணனை தனக்கு வலப்பக்கம் இருக்கச் செய்தார். வில்லைத் தோளில் தாங்கியபடி இளவலும் இருக்க, அன்னை சீதாபிராட்டியை இடதுபுறம் அமரச் செய்தார்.

இந்நிலையில் மகேசர் அளித்த வேதச்சுவடியை அனுமனிடம் தந்து படிக்கச் சொன்னார். அதை பயபக்தியோடு இருகரம் நீட்டிப் பெற்ற ஆஞ்சநேயர், பத்மாசனமிட்டு அமர்ந்த நிலையில்.... இராமபிரான் சீதாபிராட்டியை வணங்கியபின், படிக்க ஆரம்பித்தார். அந்த அற்புத வேதத்தின் உட்பொருளை விளக்கிக் கூறி தெளிவு செய்தார் ஸ்ரீ கோதண்டராமர். பின் அனுமனின் படிப்பாற்றலை பாராட்டி, "முக்திகோபநிஷத்" என்ற உபநிஷத்தை அனும னுக்கு உபதேசித்தார்.

சுகரின் வேண்டுகோளுக்கு இணங்கிய ஸ்ரீ இராமச்சந்திர பிரபு தனது அற்புத இந்தக் கோலத்தை அடியார்களுக்கு அருளியதோடு, சுகரின் முக்திக்கும் வழியளித்தார்.

இராமபிரான் இங்கு வந்ததன் சாட்சியாக நெடுமலையின் வலது புறமுள்ள சிவமலையின் உச்சியில் ஸ்ரீஇராமரின் திருவடிகள் காணப் படுகின்றது. இந்த இடத்தை "பெருமாள் பாறை" என்று இன்றும் மக்கள் வழங்கி வருகின்றனர்.

11ம் திருமுறையில் பட்டினத்தடிகள் தனது திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் 59வது பாடலாக...

"இறைத்தார் புறமெய்த வல்லிமை
நல்லிம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம், வெண்குன்றம்,
செங்குன்ற மன்னற்குன்றம் நிறைந்தார்
நெடுங் குன்றம் நீள் கழுக்குன்றம்

என் தீவினைகள் குறைத்தார்

முதுகுன்றம் ஏகம்பர் குன்றென்று கூறுமினே"

......எனப் பாடியுள்ளார். மேல் குறிப்பிட்ட மலைகளில் கச்சி ஏகம்பரே வீற்றிருந்து அருளுகின்றார் எனப் போற்றுகின்றார் பட்டினத்துப் பிள்ளையார்.

"சுகபிரம்ம பர்வதம்" எனப்படும் இக்கிளி மலையில் இருந்து உற்பத்தியாகும் சிற்றாறு கிளியாறு என்று அழைக்கப்படுகின்றது. இந்த சிற்றாறு கிளிமலையில் இருந்து புறப்பட்டு, வந்தவாசி, மதுராந்தகம் வழியாக படாளத்தை அடைந்து, பாலாற்றில் கலக்கிறது.

பேருந்து சாலையின் மேல்புறம் மிக பிரம்மாண்டமாக 6 நிலை இராஜகோபுரத்துடன் திகழ்கிறது ஸ்ரீ யோகராமர் ஆலயம்.

கீழ்ப்புறமாக சிவாலயம் கிழக்கு பார்த்தவண்ணம் சுகபிரம்மரிஷி பர்வதம் என்னும்கிளிமலையின் அடிவாரத்தில் அற்புதமாக அமையப்பெற்றுள்ளது.

கிழக்கு பார்த்தவாறு ஆலயம் அமைந்துள்ளது. உள்ளே... வலப்புறம் கணபதி சந்நிதியும், இடப்புறம் கந்தன் சந்நிதியும் அமைந்துள்ளது.

நேராக நந்தி, பலிபீடம், முன் மண்டபம் கடந்து அர்த்த மண்டபம் மற்றும் கருவறை உள்ளது. கருவறையுள் கருணை மூர்த்தமாக அருள் புரி கின்றார் ஸ்ரீதீர்க்காசலேஸ்வரர். லிங்கத்தின் கீழ் பாகமான பிரம்மபாகம் தாமரை வடிவில் அமைக்கப்பெற்றுள்ளது சிறப்பு. இங்கு அர்த்த மண்டபத்தில் தென்புறம் 25 அடி நீளமும், ஐந்தரை அடி அகலமும், 6 அடி ஆழமும் கொண்ட நிலவறை ஒன்று காணப்படுகின்றது.

ஐயனின் அற்புத தரிசனம் பெற்று முடித்து, ஆலய வலம் வருகின்றோம்.

வலம் வருகையில் தென் பிராகாரத்தில் பிரம்மாண்டமான கோலத்தில் உள்ள சப்த மாதர்களின் அதியற்புத சிலாத் திருமேனிகளைக் கண்ணுறுகின்றோம். பருவம் தவறி, மழை பொய்க்கும் காலத்தில் விவசாயிகள் இந்த சப்த மாதர்களுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட... நன்கு மழை பொழிந்து விளைச்சல் பெருகும் என்பது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும்.

உடன் இங்கு ஆதி சாஸ்தா வின் அதி உன்னத புடைப்புச் சிற்பத்தையும் காண்கிறோம். கோஷ்ட மாடங்களில் முறையான தெய்வ சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தட்சிணாமூர்த்தியோக நிலையில் ஸ்ரீ யோக




தட்சிணாமூர்த்தியாக அருள் புரிகின்றார். சுவாமி சந்நிதிக்கு வாம பாகத்தில் (இடப்புறம்) அம்பாள் சந்நிதி அமைந்துள்ளது. அம்பிகையாக ஸ்ரீ பாலாம்பிகை நின்றவண்ணம் அற்புதமாக அருள் பாலிக்கின்றாள்.

இங்கு பாதாள லிங்கேஸ்வரர் சன்னதி ஒன்று உள்ளது. முனிவர்களும், ஞானிகளும் வழிபட்ட இந்த பாதாள லிங்கமூர்த்தியை வழிபட... தீராத நோய்களும் தீரும். மேலும் ஸ்ரீ சுப்பிரமணியரின் திருமேனியையும், பிரகாரத்திலுள்ள அஷ்ட லிங்கங்களையும் தரிசிக்க எல்லா நலன்களும் வந்து சேரும் என்பது ஐதீகம்.

திருபுவனச் சக்கரவர்த்தி, சுந்தரபாண்டியன், அச்சுதப்ப நாயக்கர், கிருஷ்ண தேவராயர், வீரவெங்கடபதி ஆகிய அரசர்களால் இவ்வாலயத்தில் பல்வேறு திருப்பணிகள் செய்துள்ளனர்.

இவ்வாலய கல்வெட்டில் இறைவன் "நெடுங்குன்றம் நாயனார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அனைத்து சிவாலய விசேடங்கலும் இங்கு சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன. பங்குனி உத்திரம் மற்றும் ஆடிக் கிருத்திகையில் தெப் போற்சவம், உடன் திருக்கல்யாண வைபவம் சிறப்புற நடைபெறும் திருவிழாக்களாகும்.

இராமச்சந்திரர் ஆலயத்தில் நடக்கும் பிரம் மோற்ஸவத்தின் பத்தாம் நாள் விழாவில் தீர்க்காச லேஸ்வரர் இந்திர விமானத்தில் எழுந்தருளி, திருமாலும் ஈசனுமாக திருவீதியுலா வந்து,அருள்பாலிப்பது சிறப்பிலும் சிறப்பு.



மோ.கணேஷ்

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயத்தில் தினசரி இரண்டு கால பூஜைகள் நடைபெறுகின்றன. தீராத துன்பங்களிலிருந்து விடுவிக்கும் ஸ்ரீ தீர்க்காசலேஸ்வரரை வணங்கி நலம் பெறுவோம்.

ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ்
குருக்கள்,
ஆரணி, தொடர்புக்கு:
9789156179.

# திருமந்திரம் உணர்த்தும் துறவு

அறிவினால் அராய்ச்சி செய்து பந்த பாசங்கள் போன்ற பற்றிலிருந்து விலகி, அன்பினால் இறைவனைப் பற்றிக்கொண்டு அன்பே உடல், பொருள், ஆவியாக உணர்வதே துறவு எனப்படும். நாம் பற்றிக்கொண்டுள்ளவை, நம்மைப் பபற்றிக் கொண்டுள்ளவை என்ற இந்த இரண்டையும் துறந்த நிலைக்கே துறவு என்று பொருள். யான், எனது என்ற ஆசையைத் துறப்பவனே துறவி. இத்தகைய துறவியே வானோர்கள் வாழும் உலகம் செல்வான் என்பதைத் திருவள்ளுவரும்,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான்
வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"
(திருக்குறள் துறவு 346)

என்ற குறளைக் கொண்டு உணர்த்துகின்றார். மேலும், ஒவ்வொரு முறையும் பிறத்தல், வாழ்தல், இறத்தல் என்ற இந்தப் பிறவிப் பந்தத்தை நாம் அறுக்க வேண்டுமாயின் பற்றுகளைத் துறந்தாலே போதும் இவை தானாக அறுந்துவிடும் என்பதை,

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்"
– (திருக்குறள் துறவு 349)

என்ற குறளைக்கொண்டு புலப்படுத்துகின்றார்.

ஒவ்வொரு நாளும் பல்வேறு பொருட்களை நாம் நுகர்கின்றோம். அப்பொருட்களால் நமக்கு நன்மை மட்டுமே உண்டாகின்றது என்று எண்ணினால் அது நம்முடைய முட்டால்தனம். நாம் நுகரும் ஒவ்வொரு பொருட்கள் மீதும் நமக்கு அளவு கடந்த ஆசை ஏற்படும்போது அது பற்றாக மாறுகின்றது. இப்பற்றினால் பல்வேறு சிக்கல்களை நாம் சந்திக்க நேரும். எனவே அப்பற்றுகளையெல்லாம் துறந்து, அவற்றிலிருந்து நாம் விளகியிருந்தால்தான் அதன் மூலம் உண்டாகும் சிக்கல்கள் நம்மை நெருங்காது என்பதைத் வள்ளுவரும்,

"யாதனின் யாதனின் நீங்கியான்
நோதல்
அதனின் அதனின் இலன்"
– (திருக்குறள் துறவு 341)

என்ற திருக்குறளைக் கொண்டு உணர்த்து கின்றார்.




துறவி என்பவன் எவ்வாறு தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை திருமந்திரத்தில் பல்வேறு இடங்களில் மிகத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார் திருமூலர்.

இல்லற நெறியில் வாழும் காலத்தில்மனைவி மக்களுக்கு உடலாலும், மனதாலும் தீங்கு செய்யாமல் வாழ்வதும் துறவு வாழ்க் கையே என்கின்றார். மேலும், தானே எல்லாருக்கும் துணை செய்வதன்றி, பிறர் துணையை ஒருபோதும் வேண்டாத தன்மையும், அன்பையே பிச்சையாகக் கேட்டும், பெற்றும் வாழும் தன்மையுமே பிறர்க்கென வாழும் பெருநிலையாகிய துறவு நிலையாகும். இவ்வாறு வாழ்பவர்களின் பிறவியை அறுத்துப் பேரின்பம் அளிப்பவன் சிவன் என்று துறவிகளின் தன்மையை,

"அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே"
–(திருமந்திரம் 1590)

என்ற திருமந்திர பாடல் வரிகளைக் கொண்டு விளக்குகின்றார்.

இத்தகைய துறவு நெறியினை இரண்டு வகைகளில் நாம் மேற்கொள்ளலாம். ஒன்று ஊராருக்குத் தெரியும்படி புற அலங்காரங்களைத் துறப்பது. இது புறத்துறவு. உண்மையான புறத்துறவு என்பதில், ஆடையில் எளிமையைக் கடைபிடிப்பது, புற உடல் தசைகளின் மேல் ஆசை நீங்கி வாழ்வது, உணவுகளில் கட்டுப்பாடுகளைக் கடைபிடிப்பது மட்டுமின்றி, வெளியே பேசுகின்ற சொற்களில் பல்வேறு கட்டுப்பாடுகளைக் கடைபிடிப்பதும் அடங்கும். உண்மைத் துறவி, பேசவேண்டிய இடத்தில் பேசாமல் இருக்கவும் மாட்டான், பேசக்கூடாத இடத்தில் தவறியும் பேசிவிட மாட்டான். போலியான துறவிகளிடம் இத்தகைய செயல்பாடுகள் துளியும் காணப்படாது.

மற்றொன்று யாருக்கும் தெரியாத வண்ணம்நமக்குள்யேயே அனுபவித்து வருகின்ற ஆசை, கோபம் முதலிய குணங்களான அலங்காரங்களைத் துறக்கும் அகத்துறவு. தனக்குத் துளியும் உரிமையே இல்லாத பொருட்களின் மீது ஆசை கொண்டு வாழ்ந்துவரக்கூடிய மனிதர்களுக்கு நடுவில், தனக்கு உரிமையாக உள்ள பொருட்களையும் துறப்பதே அகத்தூது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு வகையான துறவுகளில்புறத் துறவை எளிதில் மேற்கொண்டு விடலாம். இது வெறும் காட்சிக்குத் துறவைக் காட்டிக்கொள்ளும் நிலையே தவிர, கடவுளைக் காணும் உண்மையான துறவாக இத்துறவுஅமை யாது. இத்தகைய புறத் துறவாளர்களை ஆழ்ந்து நோக்கினோமானால், இவர்கள் கடவுளைவிடத் தன்னை அதிகமாக அலங்காரம் செய்துகொண்டு, தன்னையே கடவுளாகக் காட்டிக்கொள்வர்.

ஆனால் அகத்துறவு என்பதோ ஆண்டவனைக் காண்பது. பிறரையும் ஆண்டவனைக் காண வைப்பது. இந்தத் துறவினை அடைவது என்பது சாதாரணமான செயல் அல்ல.

பிறந்ததுமுதல் இறக்கும் வரை எவையெல்லாம் நம்முடையது என்று கூறி வந்தோமோ அவை யெல்லாம் நம்முடையதல்ல என்ற முடிவை ஏற்றுக்கொள்வதும், எவற்றிற்கெல்லாம்மற்றும் எங்கெல்லாம் நாம் அவசியம் தேவை என்று ஏங்கி ஏங்கி பயணித்தோமோ, அவையெல் லாம் நாம் இல்லாமலும் இயங்கும் என்ற உண் மையை ஏற்றுக்கொள்வதும், நாம் வருவதற்கு முன்னும் நம்மைச் சார்ந்த செயல்கள்நிகழ்ந்துகொண்டு தான் இருந்தன, நாம் மறைந்த பின்னும் நம்மைச் சார்ந்த செயல்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும் என்ற உலக தத்துவத்தை உணர்ந்து கொள்வதுமே அகத்துறவு எனப்படும்.

பல்வேறு பாவ புண்ணியங்களின் விளைவாகப் பிறந்த இந்த உயிர், அவை அனைத்தையும் அனுபவித்துத் தீர்த்த பிறகு, சிவனை அடையும். அப்போது அந்த உயிர் அருட்சுடரொலிப் பெறும். இதுவே அகம் தூய்மையாகும் அகத்துறவு என்பதைத் திருமூலர்,

"பிறந்தும் இறந்தும்பல் பேதமமையாலோ
மறந்தும் மலஇருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே"

– (திருமந்திரம் 1589)

என்ற வரிகளில் சுட்டுகின்றார்.

அன்பு நெறியாகிய இல்லற வாழ் வியலும், அதன் முதிர்வான அருள் நெறியாகிய துறவற வாழ்வியலும் இரண்டு கால்களைப் போல அகம் புறம் என்று சிறப்பித்துக் கூறக்கூடிய நெறிகளாகும். இந்த இரண்டு நெறிகளையும் சிவபெரு மானே படைத்தருளினார். இவ்வாறு உலக மக்களின் நன்மைக்காக சிவ பெருமானால் படைக்கப்பட்ட இந்த இரண்டு நெறிகளையும் பின்பற்றாது தீய நெறியில் தங்களுடைய வாழ்க் கையை வாழ்பவர்கள் துன்புற்று அதன் மூலம் பாடம் கற்றுக்கொண்டு, அவர்களும் நன்நெறிக்கு மாற, நெருஞ்சி முள் போன்ற துன்ப நெறிகளையும் இறைவனே படைத்தருளினார். இவ்வாறு அனைவரும் தீய நெறியைத் துறந்து நல்ல நெறிகளைக் கடைபிடித்து வாழத் தொடங்கிவிட்டால், எவ்வகையான துன்பங்களும் அவர்களை நெருங்கா வண்ணம், இறைவனே நெருஞ்சி முள்ளாகக் காவலிருந்தும் காப்பார் என்ற சிவ தத்துவத்தை,

"நெறியைப் படைத்தான் நெருஞ்சில்
படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியின் நெஞ்சில் முட்பாயகி லாவே"

– (திருமந்திரம் 1591)

என்ற பாடல் வரிகளில் வெளிப்படுத்துகின்றார்.

அம்மையப்பனாகிய சிவபெருமான், தன்னு டைய திருவடித் தாமரையை நமக்காக நாள்தோ றும் வெளிக்காட்டிய வண்ணமே உள்ளார். நான், என்னுடையது என்ற அகச் செருக்கு உள்ள வரை யிலும் அருகில் உள்ள இறைநிலையை நம்மால் உணர இயலாது. அவற்றையெல்லாம் துறந்தால் மட்டுமே இறைவனுடைய திருவடி யுணர்வை நாம் உணரமுடியும் என்ற உலக நியதியை,

"அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்
இவன்றா தெனநின் ளெரியனும் அல்லன்
சிவன்றாள் பலபல சீவனுமாகும்
நயன்றான் வரும்வழி நாமறி யொமே"

–(திருமந்திரம் 1596)

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.

நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை ஒவ் வொரு காலத்திலும் இறைநிலை நம்மோடுதான் பயணிக்கின்றது. அது நம்மைப் புரிந்துகொண்ட அளவு நாம் அதனைப் புரிந்துகொள்ளவில்லை என்பதே உண்மை. அகப்புற நுகர்ச்சிகளின் மேல் பற்றுவைத்து, நம்மை நாம் தூய்மையாக வைத்திருக்காத கார ணத்தினாலே இந்த இறை நிலையை நம்மால் அறிய இயலவில்லை. எனவே, இப்பற்றுகளைத் துறந்து உலக உயிரினங்கள் அனைத்திற்கும் நன்மையை மட்டுமே நினைக் கும் துறவை, முறையாக கேட்கொண்டு நம்வாழ் விலும் அதனைக் கடைபிடித்து வாழ்வை வெல்வோம்.


ப.கற்பகராமன்


முனைவர் ப. கற்பகராமன்
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனாகலைமற்றும் அறிவியல்
கல்லூரி, சேலம் 05.
போன்:9894210651

# இனிப்பு என்பது வெல்லத்தின் தன்மை! உனது தன்மை என்ன?

ஒரு பொருளைக் கண்ணால் பார்க்காமல் அது இருப்பதாக அனுமானித்து நம்பிக்கையோடு கடவுளை நம்புவது என்பது தானாக தோன்றுகின்ற ஒரு எண்ணமா? இல்லையேல் விஞ்ஞான ஆராய்ச்சி போல் கடவுள் ஆராய்ச்சியும் தொடர் ஆராய்ச்சி நிலையில் உள்ள களமா அது? இரண்டும் ஒன்றா சொல்லுங்கள். விஞ்ஞானத்தில் ஒன்றை நம்பி ஒரு வழியில் ஆராய்வது என்பது உண்டு. இதுபோல தான் கடவுளுக்கும் இருக்கிறதா? விஞ்ஞானக்கல்வி போன்று தான் கடவுட் கல்வியும் ஒரு முறைப்படுத்தப்பட்ட கல்வியா? சொல்லவும்.

❖❖❖

மதங்கள் அவையவைகளின் தத்துவங்களின்படி வகைப் படுத்தப்பட்டு கடவுளை விளக்குவதில் ஒவ்வொன்றும் ஒரு முறையை கொண்டுள்ளன. அதன்படி கிறிஸ்துவமதம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம், ஜூடாயிஸம், இஸ்லாமிய சூபி சித்தாந்தம் பிறகு இந்துமதங்கள் இவைகளை விடக்கூடாது. இவைகளனைத்தும் மதங்களே. மனிதன் இவைகளின் மீது நம்பிக்கை வைத்து ஒன்று இவைகளை கொள்ள வேண்டும். அல்லது அவைகளைத் தள்ள வேண்டும். அது அவனுடைய பிறப்புரிமை. நம்பிக்கையே இல்லாமல் உலகில் ஒன்றையும் செய்ய முடியாது. கண்டுபிடிக்கவும் முடியாது.

❖❖❖

பிறரிடம் மிகவும் அன்பாய் இருப்பது என்பது ஓரளவு அதா வது சிறிய அளவு நன்மைகளைத் தரும் குணமே அது ஆகும். நன்மைகளைத் தரும் குணத்திற்கு நன்மைகள் என்பதே அதன் கரு. அதையே நன்மை என்கிறோம். தீமை என்பது இதற்கு எதிரிடையானது. உன்னிடம் நன்மையைத் தரும் குணமே இருக்க வேண்டும்.



❖❖❖

நன்மையை தருகின்ற கருத்திற்கு தமிழிலும் வடமொழியிலும் குணம் என்று பெயர். இதற்கு ஈடான சொல் உலக மொழிகளில் ஆங்கிலம் உட்பட எதிலுமே சரியான பதம் கிடையாது. மற்ற மொழிகளில் வேறு வார்த்தைகளில் இக்கருத்தைக் குறிப்பிடுகிறார்கள். ஆங்கிலமொழி ஓரளவு குணத்தை ஒரு வாரியாக ஒரு சொல்லினால் தன்மை அல்லது தரம் என்று குறிப்பிடுகிறது. ஆகவே குணம் என்பது மனிதனின் தன்மையாகியது.

❖❖❖

ஒரு சிறிதளவு நல்லவனாய் இருப்பது என்பதே நன்மை என்ற தன்மை ஆகும். இதையே நற்குணம் என்கிறார்கள்.

❖❖❖

ஒரு வெல்லக்கட்டி அதை எப்பக்கத்தில் கடித்தாலும் அது எந்த ஊரில் கிடைக்கின்ற வெல்லமாயினும் சரி எங்கும் தித்திப் பாகவே இருக்கும். இதுதான் தன்மையின் விளக்கம். இனிப்பு என்பது வெல்லத்தின் தன்மை. உனது தன்மை என்ன? வேறு தன்மை வெல்லக்கட்டியினிடம் சிறிது கூட இருக்காது. அதன் இயற் கையே இனிப்புதான். இது தான் தரமான பொருள்களின் தரம். இனி தரமும் தன்மையும் ஒன்றல்லவா? நண்பனே உனது தரமென்ன?




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


தன்மையென்ன?

❖❖❖

நற்குணம் என்ற இனிப்பான தன்மை இயற்கையாக வருவது. இயற்கையாக உள்ளது. இது சில பல மனிதர்களின் இரத்தத்தில் பிறப்பு முதல் இருந்து வருகிறது. ஆகவே உதிரத்தில் உள்ள தன்மை மூளைக்குள் சிந்தனையாகப் பரவி அதுவே நற்குணம் என்ற தன்மையாகிறது. இதற்கே சத்துவகுணம் என்று பெயர். அதனால் தான் உலகில் கெட்ட தன்மைகளை உள்ள மனிதர்களைப் போன்று நல்ல தன்மை உள்ள மனிதர்களும் இருக்கிறார்கள். அனைத்திற்கும் காரணம் பிறப்பு வழி இரத்தமே.

❖❖❖

நற்குணம் என்ற தன்மையை கொண்ட மக்கள் எப்பொழுதும் சிறிதளவேனும் எந்த ரூபத்திலாயினும் சமுதாயத்திற்கு நன்மையைச் செய்து விடுகிறார்கள். இதுதான் நல்ல தன்மையின் குணமாகும்.

❖❖❖

தயவு செய்து நீ உன்னை ஒரு நல்ல மனிதனாகவும் நற்குணம் படைத்தவனாகவும் உடனே மாற்றிகொண்டுவிடு. அதற்கு அடுத்தாற்போல் உன்னிடம் உள்ள எல்லா கெட்ட குணங்களையும் உடனே விட்டு விடு.

❖❖❖

நற்குணம் அல்லது நல்ல தன்மை என்பது உனக்கு உலகப்புகழை கொண்டு வந்து தருகிறது. உனக்கும் உலகிலுள்ள அனைவருக்கும் அமைதியைக் கொடுத்து விடுகிறது.

❖❖❖

நற்குணம் என்ற நல்ல தன்மையில் பல இருக்கின்றன. பல என்ற சொல்லுக்கு என்ற அர்த்தம் தெரியுமா? தன்மையிலுள்ள தன்மை என்ற குணத்தை பகுதி பகுதியாக எடுத்து ஆராயலாம்.

ஆராய்ந்து அதை குணநலன்களாக எடுத்துச் சொல்லலாம். இத்தகு ஆராய்ச்சியையும் ஆராய்ச்சி செய்யும் தன்மையையும் நற்குணத்தில் காணலாமே. இதுதானே அதன் பெருமை.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028









# நொய்டாவில் ‘தை பூசம்’

தை பூசத்தை முன்னிட்டு, நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயர் கோவிலில், ஸ்ரீ கார்த்திகேய பகவானுக்கு சிறப்பு அபிஷேகம், காலை தொடங்கியது. தைல எண்ணெய், திரவிய பொடி, மா பொடி, மஞ்சள், பஞ்சாமிருதம், பால், தயிர், தேன், பழச்சாறுகள், நெய், விபூதி, சந்தனம் ஆகியவற்றால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. ஸ்ரீ கார்த்திகேய பகவான் பல்வேறு மலர்களால் அலங்கரிக்கப்பட்டார்.

பக்தர்கள், கந்த சஷ்டிகவசம், கந்தர் அனுபூதி மற்றும் ‘முருகனின் மறு பெயர் அழகு’ உள்ளிட்ட பிரபலமான பக்தி பாடல்களை பாடிக் கொண்டிருந்தனர்.

‘அலங்காரம் மற்றும் ஸ்ரீகார்த்தி கேயருக்கு சிறப்பு அபிஷேகங்கள் அனைத்தும்,தமிழ் நாடு முழுவதும் மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள அனைத்து முருகன் கோயில் களிலும் கொண்டாடப்பட்ட நேரத்தில் நடைபெற்றது.



எஸ்.வெங்கடேசன்

மகா தீபாராதனையுடன் அன்றைய நிகழ்வு நிறைவடைந்து, அனைத்து பக்தர்களுக்கும் ‘சக்கரைப் பொங்கல்’ மற்றும் ‘பஞ்சாமிருதம்’ வழங்கப்பட்டது.

கொரானா பாதுகாப்பு ஏற்பாடுகள் அரசின் நெறிகாட்டுதல் வழிமுறைப்படி கடைபிடிக்கப்பட்டது. பக்தர்கள் முகமூடி அணிந்தபடி காணப்பட்டனர், கோவில் நிர்வாகம், பக்தர்களின் வசதிக்காக, நுழைவாயிலிலேயே சானிடைசர் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் முறையாக கடைபிடிக்கப்பட்டது.

கடுமை யான குளிர்காலத்திலும், ஆறு டிகிரி வரை வெப்பநிலையைத் தொட்டாலும், ஸ்ரீ மணிகண்டன் சர்மா அவர்கள், காலையில் கோயிலுக்குச் சென்று சிறப்பு அபிஷேகம் செய்தார். பக்தர்கள் அனைவராலும் பாராட்டப்பட்டது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண் போன்:
9811161370

# கடன் தீர்க்கும் வழிமுறை




வெள்ளிக்கிழமையில் உப்பை வாங்கி ஒரு சிறிய கண்ணாடி அல்லது பீங்கான், வெண்கல பாத்திரம் போன்ற ஏதாவது ஒன்றில் உப்பை கோபுரம் போல் கொட்டிக் கொள்ளுங்கள். அந்த உப்பு கண் ணாடியில் தெரியும்படி ஒரு கண்ணாடியை பூஜை அறையில் வைக்க வேண்டும். உங்களிடம் புது கண்ணாடி இல்லையென்றால் கண்டிப்பாக அதனை வாங்கி வைத்துக் கொள்வது நல்லது. எப்பொழுதும் பூஜை அறையில் ஒரு சிறிய கண்ணாடி இருக்க வேண்டும். அதில் குலதெய்வம், நம் முன்னோர்கள் போன்றவர்கள் தோன்றுவார்கள் என்கிறது சாஸ்திரம்.

எனவே...

கண்ணாடியை வைத்து அதன் முன்பு இது போல் உப்பை குவித்து வைத்தால் கோடி கோடியாய் கடன்கள் இருந்தாலும் விரைவில் அடைய கூடிய பாக்கியம் உண்டாகும். வெள்ளிக்கிழமை முழுவதும் அந்த கண்ணாடியில் உப்பு தெரிய வேண்டும். மறுநாள் அந்த உப்பை வழக்கம் போல நீங்கள் சமையலுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இப்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செய்து வைத்து கொண்டே வந்தால் கடன்கள் யாவும் சீக்கிரமாக நிவர்த்தியாகும். புதிதாக கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகாது, தோஷங்கள் தீரும்...

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்






## நான்கு பெருமாள் கோயில்கள் 18 அடி ராமானுஜருடன் காட்சிதரும்




# சேலம் ராமானுஜர் மணிமண்டப திருக்கோவில்

சேலம் மாநகர் புதிய பஸ்ஸ்டாண்டில்இருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் கொண்டலாம்பட்டி சீலநாயக்கன்பட்டி பைபாஸ் சாலையில் எருமாபாளையம் பஸ்ஸ்டாப்பில் இறங்கி அந்த இயற்கை எழில் சூழ்ந்த கிராமம் உள்ளே சென்றால் ஆன்மீகத்தில் புரட்சி செய்த பிரம்மாண்டமான கண்கவரும் மனம் ஒன்ற வைக்கும் ராமானுஜத்தின் நான்கு பெருமாள் கோயில் கள் சூழ்ந்த ஸ்ரீ பகவத் ராமானுஜம் ஆயிரமாவது ஆண்டு மணி மண்டபம் சென்று நாடி வரும் பக்தர்களின் அத்தனை பிரார்த்தனைகளையும் நிறைவேற்றி வைக்கும் வைணவர்களால் ‘உடையவர்’’ என கொண்டாடப்படும் ஸ்ரீ ராமானுஜரை தரிசனம் செய்து மகிழலாம்.

2012ம் ஆண்டில் த்ருதண்டி நாராயண ஜீயர் ஸ்வாமிகள் போன்ற பெரியோர்கள், ஆன்மீக வழிகாட்டிகள் முன்னிலையில் திருக்கோயில் மணிமண்டபம் பூமிபூஜை போடப்பட்டது.

இந்த ராமானுஜர் மணிமண்டபம் கட்டி முடிக்கப்பட ஐந்து ஆண்டுகள் ஆனது. 2017ம் ஆண்டில் இந்த வைணவர்களின் ஆச்சாரியார் ஸ்ரீபகவத் ராமானுஜத்தின் திரு நட்சத்திரத்திரம் போது






முடிவு பெற்றது. சம்ரோஷணம் செய்யப்பட்டு இந்த ராமானுஜத்தின் மணிமண்டபமும் சுற்றி உள்ள நான்கு பெருமாள் திருக்கோயில்களும் திறக்கப்பட்டு பக்தர்கள் வழிபாடு செய்து வருகிறார்கள்.

90 சதவிகித கோவில் கட்டுமான பணிகள் தற்போது முடிந்துவிட்டாலும் இன்னும் 10 சத விகித பணிகள் பாக்கி இருக்கிறது. இதுவரை இந்த மணிமண்டப திருக்கோயில் கட்ட எட்டு கோடி ரூபாய் செலவாகி உள்ளது. ஆன்மீக ஈடுபாடு கொண்ட பக்தர்கள் பொதுமக்களிடம் நன்கொடை பெற்றே ராமானுஜத்தின் ரம்மியமான இந்த மணி மண்டப திருக்கோயில் உருவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.





ஆடிட்டர் எஸ்.ஸ்ரீராமன்

தற்போதும் பக்தர்களின் நன்கொடை பெற்றே மீதமுள்ள கட்டுமான பணிகள் நடந்து வருகிறது.

சேலத்தில் புகழ்பெற்ற வழிபாட்டு தலமாக இது அமைந்துள்ளது. கம்பீரமாக நடுவில் அமைந் திருக்கும் மணிமண்டபத்தில் படிக்கட்டுகள் சில ஏறிச்சென்றால் பதினெட்டு அடி உயர ஸ்ரீ பகவத் ராமனுஜரை காணும் போது மெய்சிலிர்த்துவிடும்.

ஸ்ரீ ராமானுஜா... தங்கள் பாதங்களே சரணம் என்று விழுந்து கும்பிட வைத்துவிடுவார். இந்த ராமானுஜருக்கு கீழே இடது வலமாக இவரது பிரதான சிஷ்யர்கள் ஸ்ரீ கூரத் ஆழ்வார், ஸ்ரீ முதலியாண்டான் அருள் தருகிறார்கள்.

வருடம்தோறும் பவித்ர உற்சவம்நான்கு நாட்களுக்கு சிறப்பு ஹோமமுடன் நடக் கிறது. இந்த ஸ்ரீ ராமானுஜர் மணிமண்டப வளாகத்தில் 74 தென்னை மரங்கள் குறிப்பாக வளர்க்கப்படுகிறது. இதற்கு காரணம் என்ன வென்றால், ஸ்ரீ ராமானுஜர் வைணவ மதத்தை பரப்புவதற்காக 74 ஆச்சார்யார்களை நியமனம் செய்தார்கள். இவர்களுக்கு சிம்மாசனாதிபதிகள் என்று பெயர். இவர்களை பக்தர்கள் அறிவதற்கு

இங்கே இந்த 74 தென்னை மரங்கள் வளர்க்கப் படுகிறது.

ஸ்ரீ ராமானுஜருக்கு உகந்த நான்கு திவ்ய தேசங்களான திருப்பதி திருராமாயணபுரம், ஸ்ரீ ரங்கம், காஞ்சிபுரம் ஆகிய நான்கு பெருமாள் சன்னதிகளும் இங்கே பக்தர்கள் பரவசம்படும்படி சிறப்பாக அமைந்துள்ளது.

இந்த ஸ்ரீ ராமானுஜர் தரிசனம் காண வரும் பக்தர்களுக்கு தரிசிக்கும் முறை இருக்கிறது.

அதன்படி முதலில் மலைக்கோவில்போல் அமைந்திருக்கும் நடுநாயகமாக உள்ளகம்பீரமாக தோற்றம் தரும் குருஆச்சாரியனை படிக்கட்டுகள் ஏறிச்சென்று ஸ்ரீ ராமானுஜரை மணிமண்டபத்தில் தரிசனம் செய்து மனமார பிரார்த்தனைகள், வேண்டுதல்கள் செய்துவிட்டு பிறகுதான் தரை தளத்தில் உள்ள வரம்தரும் காஞ்சி வரதராஜரை வணங்கி, அதன் பின்னர் கலியுக கண்கண்ட தெய்வமாய் விளங்கிடும் திருப்பதி ஏழுமலையான் சன்னதி சென்று தரிசித்து, செல்வங்களை வழங்கும் மேல்கோட்டை செல்வநாராயண பெருமாள் சன்னதி சென்று சேவித்து, இறுதியாக முக்தியை வழங்கும் ஸ்ரீ ரங்கம் ரங்கநாத பெருமாள் சன்னதி சென்று வணங்கி விட்டால் வாழ்வில் எந்த குறையும் இன்றி, ஆரோக்கிய, ஐஸ்வர்ய, மான கௌரது, அறிவுமிக்க புகழ்பெற்ற வாழ்வு உறுதியாக நாம் பெற்று விடலாம்.

ஒரு லட்சம் பரந்து விரிந்த சதுரஅடியில் இந்த மணிமண்டப திருக்கோவில் அமைந்துள்ளது. வயதானவர்கள், நடக்க முடியாதவர்கள் மேலே உள்ள ஸ்ரீ ராமானுஜர் மணிமண்டபம் செல்ல 'லிப்ட்" வசதி உள்ளது.

கீழே உள்ள நான்கு பெருமாள் திருக்கோயில் சென்று தரிசிக்க 'பேட்டரி கார்" வசதியும் உள் ளது.

நித்யபடி பூஜைகள், பெருமாளுக்கு உகந்த உற்சவங்கள், யாகங்கள், அன்ன தானங்கள் அனுதினமும் முறைப்படி செய்யப்பட்டு வருகிறது.

நித்யபூஜை, அன்னதானம், பூக்கள் அலங்காரம், கோ எனும் பசுமாடு ஸேவை, தீப ஆராதனைகள் ஸ்ரீ ராமானுஜர் மற்றும் நான்கு பெருமாள் சன்னதிகளிலும் அர்ச்சர் களால்நடைபெற்று வருகிறது.

பசுமாடுகள் உள்ள கோசாலையும் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகி றது. சன்னதிகளில் வரிசை, தரிசன கட்டணம் ஏதும் இங்கு இல்லை. பக்தர்கள் மனம் விரும்பி அன்னதானம் மற்றும் கோவிலின் மீதமுள்ள திருப்பணிகளுக்கு அளிக்கும் நன்கொடைகளை மட்டுமே ஏற்றுக் கொள்கிறார்கள்.

கோவர்த்தன கிரி கிருஷ்ணர், குழந்தைகள் விளையாட சறுக்கு மரம், ஊஞ்சல் போன்றவையும் இங்கு இருப்பதினால் சேலம் மற்றும் பல ஊர் களில் இருந்தும் பக்தர்கள் குடும்பத்துடன்இறைவழிபாடு மட்டுமன்றி குதூகலமான சுற்றுலா போலவும் இங்கு குடும்பத்துடன் வந்து செல்கிறார்கள்.

இங்கு காளிங்க நர்த்தன சன்னதி உருவாகி வருகிறது. இங்கு மாதா மாதம் பெருமாளின் திருநட்சத்திரம் வரும்போது திருமஞ்சணம் நடக் கிறது. உடையவர் ஸ்ரீ ராமானுஜருக்கு மாதம் திருவாதிரை அன்று திருமஞ்சணம் நடக்கிறது.

சித்திரை திருவாதிரை ஒருநாள் முழுக்க கொண்டாடப்படுகிறது. நவராத்திரி போன்ற பண் டிகை நாட்கள் கொண்டாடங்கள், ஆழ்வார்களின் திருநட்சத்திர கொண்டாடங்கள் நடக்கிறது. இந்த ஸ்ரீ ராமானுஜர் மணிமண்டபம் திருக்கோவில் சேலம் ஸ்ரீ பகவத் இராமானுஜ கைங்கர்ய சொஸைட்டியால் செயல்படுகிறது.

இதன் தலைவராக சேலம் சார்டர்ட் அக்கவுண் டண்ட் ஆடிட்டர் எஸ்.ஸ்ரீராமன் அவர்களும், சேலம் ஸ்ரீ முரளி பிரிண்டர்ஸ் அதிபர் ஜி.ஆர். முரளிதரன், செயலாளர் செகரட்டரி மற்றும் ஐம்பது உறுப்பினர்களும் இந்த சேலம் எருமாபாளையம் ஸ்ரீ பகவத் ராமானுஜர் மணிமண்டபம் மற்றும் பெருமாள் திருக்கோவில் சன்னதிகளை நாடிவரும் பக்தர்கள் பாராட்டும்படி சிறப்பாக திட்டமிட்டு செயல் செயல்பட்டு வருகிறார்கள்.

இந்த ஸ்ரீ இராமனுஜர் மணிமண்டபம் திருக்கோவில் தினமும் காலை ஆறு மணிமுதல் மதியம் பனிரெண்டு மணி வரையும், மாலை நான்கு முதல் இரவு ஏழு மணிவரையும் பக்தர்கள் தரி சனம் செய்ய திறந்திருக்கும்.

மேலும் விவரங்கள் பெற 9894766501 என்ற கை பேசி எண்ணை தொடர்பு கொள்ள லாம்.



விஜயா கண்ணன்

– விஜயா கண்ணன்,
புது விளாங்குடி, மதுரை–625 018.
Ph:8825729455

# பயத்தை போக்கி
## ஆணவத்தை அழிக்கும் சிவன்
## தந்தைக்கு சிரார்த்தம் செய்தால் அருளும் அம்மன்

அருள்மிகு பிரகன்நாயகி அம்மன் உடனுறை பிறவிமருந்தீஸ்வரர் திருக்கோயில் – திருத்துறைப்பூண்டி.

அமைவிடம்: திருவாரூரில் இருந்து 30 கி.மீ. தாரத்திலுள்ள திருத்துறைப் பூண்டி நகரின் மையத்தில் கோயில் அமைந்துள்ளது..

அஸ்வினி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தம் வாழ்நாளில் அடிக்கடியோ, அல்லது அஸ்வினி நட்சத்திர நாளிலோ சென்று வழிபடவேண்டிய திருத்தலம். மரகத லிங்கம் அமைந்துள்ளது.

பயம் என்ற சொல்லுக்கே இடமிருக்காது. இவர் ஆணவத்தையும் வேரறுப்பவர்.

அஸ்வினி நட்சத்திர தேவதைகளும், மருத்துவ தேவதைகளும் தினமும் வழிபாடு செய்யுக்கூடிய் கோயிலாகும்.

மூலவர்: பிறவி மருந்தீஸ்வரர்

அம்மன்/தாயார்: பிரகன்நாயகி (பெரியநாயகி)

பழமை: 1000–2000 வருடங்களுக்கு முன்

ஊர்: திருத்துறைப்பூண்டி

மாவட்டம்: திருவாரூர்.

தல வரலாறு: இத்தல இறைவன் மேற்கு நோக்கி அருள்பாலிப்பது முக்கிய சிறப்பாகும். இக்கோயிலின் விசேஷ அம்சம் சிவனின் கஜசம்ஹார மூர்த்தி யாகும். அமாவாசை, பவுர்ணமி நாட்களில் இம் மூர்த்தியை வழிபடுவதன் மூலம் மனதில் பயம் என்ற சொல்லுக்கே இடமிருக்காது. இவர் ஆண வத்தையும் வேரறுப்பவர்.

அஸ்வினி நட்சத்திரத்திற்கு மருத்துவச் சக்திகள் அதிகம் உண்டு. அஸ்வினி நட்சத்திர தேவதைகளும், மருத்துவ தேவதைகளும் தினமும் வழிபாடு செய்யுக்கூடிய தலமே பிறவி மருந்தீஸ்வரர் கோயிலாகும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பிறவியிலேயே நோய் நிவாரணத்தன்மை இருக்கும். இருந்தாலும் இவர்கள் தம் வாழ்நாளில் அடிக்கடியோ, தாங்கள் பிறந்த நட்சத்திர நாளிலோ, இத்தலம் சென்று தன்வந்திரி ஹோமம், சனீஸ்வர ஹோமம், செவ்வாய் பகவான் வழிபாடு செய்தால் நோயில்லாத வாழ்வு அமையும்.

இவ்வுலகில் பிறவி எடுத்த அனைவருக்கும் ஏதோ ஒரு வகையில்துன்பம் வருகிறது. இந்த துன்பத்திலிருந்து விடுபட பி ற வி








மருந்தீஸ்வரரரை வழிபடுவது சிறப்பு. ஜல்லிகை என்பவள் அரக்க குலத்தில் பிறந்தாலும், சிவ பக்தியில் சிறந்தவள். அவளுக்கு மனிதனை உண்ணும், விருபாட்சன் என்ற ராட்சஷன் கணவனாக அமைந்தான்.

ஒருமுறை, ஒரு அந்தணச்சிறுவன் தன் தந்தைக்கு சிரார்த்தம் செய்ய கங்கைக்கு சென்று கொண்டிருந்தான்.

விருபாட்சன், அவனை விழுங்க முயன்றான். ஜல்லிகை தடுத்தாள். அந்தணர்களை விழுங்கினால் அவ்வுணவே விஷமாகும் என ஜல்லிகை எச்சரித்தாள். கேட்க மறுத்த விருபாட்சன், சிறுவனை விழுங்கியதால், விஷமேறி இறந்தான்.

ஜல்லிகை திருத்துறைப்பூண்டி சிவனை வணங்கி, இறைவா! என் கணவன் நல்லவன் அல்ல, இருப்பினும் அவனின்றி நான் வாழேன். அரக்க குணத்தை மாற்றி, இரக்க குணமுள்ளவர்களையே இவ்வுலகில் பிறக்கச் செய். இல்லையேல், பிறவியிலிருந்து விடுதலை கொடு, என வேண்டினாள். இறைவனின் துணைவியான பெரியநாயகி காட்சியளித்தாள். அம்மனின் அருளால் விரு பாட்சன் உயிர் பெற்றான். அத்துடன், அவன் வயிற்றில் கிடந்த அந்தணச்சிறுவனையும் எழுப்பி னாள்.




அம்மா! நான் என் வழியே போய்க்கொண்டிருந்தேன். இடையில் இவன் என்னை விழுங்கினான். விதி முடிந்த என்னை உயிர்ப்பித்த காரணம் என்ன? என்றான். அவனிடம் அம்பிகை, மகனே! தந்தை இறந்த பிறகும், எவன் ஒருவன் அவரை நினைத்து ஆண்டுதோறும் அவருக்கு சிரார்த்தம் செய்கிறானோ, அவனுக்குஎன்னருள் நிச்சயம் உண்டு. அது மட்டுமின்றி, மறைந்த அந்த தந்தைக்கு மறுபிறவி இல்லாமலும் செய்து, சொர்க்கத்தில் இடமளிப்பேன், என்றாள்.

ஜல்லிகையிடம், மகளே! நீ அசுர குலத்தவள் ஆயினும், நற்குணங்களையே கொண்டிருந்தாய். எவள் ஒருத்தி, எவ்வளவு கஷ்டம் வந்தாலும், அதைத் தாங்கிக் கொண்டு, இன்முகத்துடன் பதிசேவை செய்கிறாளோ, அவளது மாங்கல்ய பலத்தை உயர்த்துவதோடு, அவள் நிம்மதியாக வாழவும் வழி செய்வேன். அவளது கணவனை திருத்துவேன், என்றாள். இவ்வாறு இறைவனும், இறைவியும் பிறவி என்ற பெரும்பிணிக்கே மருந்து தருபவர்களாக உள்ளனர்.


சிவத்திரு.குமரேசன்

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in




# இதுவரை
# வெளிவந்த
# அனைத்து
# இதழ்களையும்
# எந்தவித
# கட்டணமின்றி
# முற்றிலும்
# இலவசமாக
# படிக்க
# aanmeegamalar.com
## இணையதளத்தை
## பார்க்கவும்


















# பிக்ஷை எடுத்த தம்பதி செல்வந்தராக்கிய பெரியவா!

ஒரு முறை ஸ்ரீ மகாபெரியவா திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் முகாமிட்டிருந்தார். மகாபெரியவர் பாபநாசத்தில் முகாமிட்டிருக்கும் செய்தியைக் கேட்டு சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து ஸ்ரீ மகாபெரியவாளை தரிசித்து அனுக்ரஹம் பெற்றுச் சென்றனர். மகாபெரியவா முகாமிட்டிருந்த இடத்திற்கருகே ஒரு பார்வை யற்ற தம்பதியர் கையில் பார்வையில்லா கைக்குழந்தை யுடன் பிக்ஷை எடுத்துக் கொண்டிருந்தனர்.

சென்னையில் ஒரு மிகப்பெரிய செல்வந்தர் ஸ்ரீ




மகாபெரியவா முகாமிட்டிருக்கும் இடத்திற்கெல்லாம் சென்று ஸ்ரீ மகாபெரியவாளின் அனுக்ரஹம் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்!

பெரியவா பாபநாசத்தில் முகாமிட்டிருப்பதை அறிந்து அந்த செல்வந்தர் பாபநாசத்திற்கு வந்து மகாபெரியவாளின் அனுக்ரஹம் பெற்றுச்செல்ல வந்தார்! அந்த பிக்ஷையெடுக்கும் தம்பதி இந்த செல்வந்தரிடமும் பிக்ஷை கேட்டிருக்கிறது!

அவ்வளவுதான். ஆத்திரம் வந்தது அந்த மிகப்பெரிய தனவந்தருக்கு! கோபத்தில் அந்த தம்பதியை வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டு அவர்களை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு முகாமுக்குள் நுழைந்தார் அந்த செல்வந்தர்!

ஸர்வமும் அறிந்த சர்வேஸ்வரனுக்கு இவர் செய்த காரியம் தெரியாதா என்ன? முகாமுக்குள் ஸ்ரீ மகாபெரியவர் நிறைய பக்தர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்! இவரைக் கண்டுக்கவே இல்லை. கடைசியில் எல்லா பக்தர்களிடம் பேசி முடிந்த பிறகு இவர் கையில் வைத்திருந்த தட்டில் புஷ்பங்கள், பழ வகைகள், மஞ்சள் குங்குமம் முதலிய பொருட்களுடன் ஸ்ரீ மகாபெரியவாளிடம் சென்றார்.

மகாபெரியவாள் முன்பு எல்லாவற்றையும் சமர்பித்துவிட்டு பெரியவா, நான் சென்னையில் இருந்து உங்கள் தரிசனத்துக்கு வந்திருக்கேன்! நீங்க தான் என்னை ஆசீர்வாதம் பண்ணனும் என்றார்!

அடுத்து என்ன நடக்கப்போகிறதென முகாமில் இருக்கும் பக்தர்கள் அனைவரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீ மகாபெரியவாள் சற்றே அதிபயங்கரமான கோபத்துடன் முகாமுக்கு வெளியே பிக்ஷை எடுத்துக்கொண்டிருந்த தம்பதியை என்ன பண்ணே?

அவ்வளவுதான்! ஆடிப்போய்விட்டார் அந்த செல்வந்தர். அடுத்து மகாபெரியவா என்ன சொல்லப்போகிறாரென ஆவலுடன் பக்தர்கள் கூட்டம் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந் தது!

சாஷ்டாங்கமாக ஸ்ரீ மகாபெரியவா திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்து தேம்பி தேம்பி அழ

ஆரம்பித்துவிட்டார் அந்த செல்வந்தார்!

ஸ்ரீ மகாபெரியவா கடுமையான கோபத்துடன் திருவாய் மலர்ந்தார்!

ஏன்டா உன்னால அந்த பிகைஷ எடுக்குற தம்பதிக்கு எதுவும் கொடுக்க முடியல்லைன்னா என்னால ஒன்னும் கொடுக்க முடியாதுனு சொல்லிட்டு போகவேண்டியது தானே முறை? அத விட்டுட்டு பாவம் அவாளை கண்டபடி திட்டுனது மட்டுமில்லாம அவாள அடிச்சு உதச்சிருக்கே! நீ செஞ்ச பாவத்துக்கு ப்ராயஸ்சித்தம் இல்லைனு சொன்னார் மகாபெரியவர்!

அவ்வளவுதான் அரண்டுபோய்விட்டார் அந்த செல்வந்தர்!

நா பெரிய பாவம் பண்ணிட்டேன் பெரியவா! செஞ்ச பாவத்துக்கு பரிகாரமே இல்லையா பெரியவானு அழ ஆரம்பித்துவிட்டார்!

மகாபெரியவர் மனமிரங்கினார்!

இந்த பாபநாசத்துல இருக்குற பாபவிநா சேஷ்வர ஸ்வாமிய இப்போவே போய் வணங்கு! அங்க உன் பாவத்துக்கு பரிகாரம் தேடிக்கோன்னு சொல்லிட்டார்!

அடுத்த நொடியே பாபவிநாசேஷ்வர ஸ்வாமி கோவிலுக்குப் பறந்தார்! அங்கு வீற்றிருக்கும் ஸ்ரீ பாபவிநாசேஷ்வர ஸ்வாமியிடம் தான் செய்த பாவம் தீருவதற்கான பரிகாரத்தை வேண்டி தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார்!

அன்று இரவில் அந்த செல்வந்தரின் கனவில் ஸ்ரீ பாபவிநாசேஷ்வர ஸ்வாமியின் உருவத்தில் ஸ்ரீ மகாபெரியவாளே தரிசனம் தந்தார்! நீ உன் காலால் எட்டி உதைத்து அடித்த அந்த பார்வையற்ற பிகைஷயெடுக்கும் தம்பதிக்கு எந்த விதத்திலாவது உபகாரம் செய்! அதுவே நீ செய்த பாவத்திற்கு பரிகாரமாகும் எனக் கூறிவிட்டு மறைந்தார்!

அடுத்த நாள் காலையில் அந்த தம்பதியர் பிகைஷயெடுக்கும் இடத்திற்கு அந்த செல்வந்தர் வந்தார்!

பார்வையற்ற தம்பதியரை பார்த்தார்! தேம்பித் தேம்பி அழுதுகொண்டே அந்த பார்வையற்ற நபரின் கையைப் பிடித்துக்கொண்டே நான் மிகப்பெரிய பாவம் செய்துவிட்டேன்! நான் செய்த பாவத்திற்கு பரிகாரமாக உங்களுக்கு கண்பார்வை கிடைக்கும்பொருட்டு நானே உங்கள் மூவரின் கண்சிகிச்சைக்குச் செலவு செய்வேன்! நான் உங்களுக்கு தொழில் ரீதியிலாக உதவி செயயும் பாக்கியத்தை சாக்ஷாத் பாபவிநாசேஷ்வர ஸ்வாமியே எனக்கு அருளியிருக்கிறார் இதை நீங்கள் தயவு செய்து நிராகரித்துவிட வேண்டாம் எனக்கூறிக்கொண்டே தன்பையில் வைத்திருந்த 20லட்சம் ரூபாய்கான காசோலையைக் கொடுத்துவிட்டார்!

ஒரு மாதம் தன்னுடைய சென்னை வீட்டில் தங்க வைத்து அவர்களுக்குப் பார்வை கிடைப்பதற்கு உண்டான முழு செலவையும் அந்த தனவந்தரே ஏற்றுக்கொண்டார்!

தற்போது அந்தத் தம்பதி ஸ்ரீ மகாபெரியவாளின் அருட்கடாக்ஷத்துடன் எந்தவிதமான குறையுமின்றி சகலவிதமான செல்வங்களுடன் எகிப்து நாட்டில் வசித்து கொண்டிருக் கிறார்.

பிகைஷயெடுத்த தம்பதியை பெரும் செல் வந்தராக மாற்றிய மகாபெரியவாளின் அற்புதங்களை வார்த்தை களால் வர்ணிக்க முடியா தென்பதே நிதர் சனமான உண்மை!



# நோய் தீர்த்து மரண பயம் போக்கி, நன்மை தரும் கருட பகவான்




ஒருவர் தொடர்ந்து ஆறு மாதம் கருட மந்தி ரத்தை உச்சரித்து வந்தால், அவருக்கு தன் சக்தி யின் ஒரு துளியை கருடன் தருகிறார் என்பது ஐதீகம். அந்த கருட மந்திரம்...

சர்ப்ப தோஷம் நீங்க, விஷம் நீங்க உதவும் ஸ்ரீ கருட காயத்ரி

ஓம் தத்புருஷாய வித்மஹே|
ஸ்வர்ண பக்ஷாய தீமஹி |
தன்னோ கருட ப்ரசோதயாத் ||

ஸ்ரீ கருடன் பகவான் ஸ்ரீ மன் நாராயணனின் வாகனமாவார். பெரிய திருவடி என்றும் சுபர்ணன் என்றும் அழைக்கப்படுகிறார்.

அமிர்த கலசத்தை தன் கையில் ஏந்திய வரே, அனைத்து தேவ, தேவியர்களால் வணங்கப் படுபவரே, இவரின் பெருமையை யாராலும் விவ ரிக்க முடியாதவராக விளங்குபவர்.

இவரின் இறக்கை காற்று அண்டங்களை எல்லாம் நடுநடுங்கச் செய்யும். இவரை வணங்கி னால் பாம்பு விஷம் நீங்கும். சக விஷத்தால் ஏற்பட்ட வியாதிகளும் நீங்கும்.

இந்த கருட துதியை நோயுற்றவர்கள் அல்லது அவர்களது சார்பாக யாரேனும் ஒருவர் 1008 முறை விபூதியில் ஜபம் செய்து தரிசனம் செய்தால், விஷத்தால் ஏற்பட்ட பாதிப்பும், நோய்கள் விலகும் என்று அனுபவத்தில் உணர்ந்தவர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

கருடனை செல்வத்தின் சின்னமாக கருதுகின்றனர். அது கூர்மையான பார்வை கொண்டது. எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் கீழே உலவும் மற்ற வஸ்துக்கள் அதன் பார்வைக்குத் தெரியும். தொலைநோக்குப் பார்வை கொண்டது இவ்வளவு சிறப்பு வாய்ந்த கருடனை காக்கும் கடவுளான திருமால் வாகனமாக ஏற்றார்.



அழகுராஜா

மனிதன் தன் வாழ்வை பாதுகாத்துக் கொள்ள வேண்டு மானால், தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய திட்டங்களை வைத்திருக்க வேண்டும். ஒரு ஆற்றுக்குக் குளிக்கச் சென்றால் அதனுள் கழிவுகளைப் போட்டு நிரப்பக்கூடாது. எதிர்காலத்தில் தனது சந்ததியும் அதே ஆற்றைப் பயன்படுத்த வேண்டுமே என்ற உணர்வு வர வேண்டும்.

இவ்வாறு தொலைநோக்கின்றி இஷ்டத்திற்கு நடந்தால் இறைவனின் கோபத்திற்கு ஆளாக நேரும். காக்கும் கடவுள் நம்மை கைவிட்டு விடுவார். இயற்கை நம்மைத் தண்டித்து விடும். இதை உணர்த்தும் வகையிலேயே கூரிய பார்வையுடைய கருடனை வாகனமாகக் கொண்டுள்ளார் திருமால். மேலும் கருடன் பார்வைபட்டால் உடலிலுள்ள விஷக்கிருமிகள் அழிந்து விடும். நோயற்ற வாழ்வு கிட்டும். நோயில்லாதவர் உலகின் பெரிய பணக்காரர் ஆகிறார். எனவே கருடனை செல்வத்தின் சின்னமாக கருதுகின்றனர்.

நோய் வாய்பட்டவர் மட்டுமில்லாமல் மற்றவர்களும் மேற்கண்ட காயத்திரி மந்திரத்தை தியானித்து வந்தால் மரண பயம் நீங்கி, நோய் நீங்கி நன்மை கிடைக்கும்..

– தொகுப்பு: – முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182


மீல் மேக்கர் கிரேவி
MEAL MAKER GRAVY
கீதா சமையல்
சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம்.
கீதா சமையல் You Tube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்
கோதுமை
ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது
You Tube சேனலை பாருங்கள்
பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்
LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

34

உலகில் நாம் ஒரு பணி செய்யும்போது பொறுமையாகவும் மனதை ஒருமுகப்படுத்தி ஈடுபாட்டுடன் செய்யும்போதும் அந்தப் பணியில் எளிதில் வெற்றி பெறுவதற்கு முடியும். கல்வி கற்பதில், ஓவியம் வரைதல், மற்ற எந்தவிதமான செயல்பாடுகள் என்றாலும் அதில் மனம் ஒருமுகப்படுத்தி முழு ஈடுபாட்டுடன் செய்யும்போது வெற்றிகரமாக முன்னேற்றம் அடையலாம். இதற்கு மகாபாரதத்தில் வரும் ஒரு காட்சியை நினைத்து பார்த்தால் நன்கு விளங்கும்.

மகாபாரதக்கதையில் காணப்படும் ஒரு நிகழ்வை நினைத்துப் பார்த்தால் மனதை ஒருமுகப்படுத்துதல் என்றால் என்ன என்பது பற்றி நன்கு புரியும். தன்னோட மாணாக்கர்களுக்கு துரோணர் வில்வித்தை கற்றுக் கொடுக்கும்போது மரத்தில் அமர்ந்திருக்கும் ஒரு பறவையை சுட்டிக்காட்டி மரக்கிளையின் மீது என்ன தெரிகிறது என்று ஒவ்வொரு மாணாக்கரிடமும் கேட்டார். அதற்கு ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதமாக மரம் தெரிகிறது என்று கூறினார்கள். மரத்தின் கிளைகள் பூ காய் கனி கிளையில் அமர்ந்து இருக்கும் பறவை தெரிகிறது என்று கூறினார்கள்.

அவர் இதே கேள்வியை அர்ச்சுனனிடம் கேட்கும்போது "குருவே இப்போது நான் கையில் வைத்திருக்கும் வில்லில் நாண் ஏற்றி இருக்கும் இந்த அம்பின் கூர்மையான நுனியும், கிளையில் அமர்ந்து இருக்கும் பறவையினைத் தவிர வேறு ஒன்றும் எனது கண்களுக்குத் தெரியவில்லை என்று கூறினான். அதனால்தான் அர்ச்சுனன் வில்வித்தையில் சிறந்தவனாகத் திகழ முடிந்தது. நமது மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சியில் செயல்பாட்டில் அர்ச்சுனன் போன்று நிலைப்பாடு இருந்தால்தான். ஆன்மீகத்தில் மட்டுமல்லாமல் எதிலும் நாம் எளிதில் வெற்றி காணலாம். அதாவது மன அமைதிக்கு பொறுமையுடனும் தீவிரமாகவும் மனதை ஒருமுகப்படுத்தும் ஆன்மீகப் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

ஒருமுகப்படுத்தும் பயிற்சியின் மூலம் நம் மனதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், அந்த மனதை ஓரிடத்தில் ஒரு பொருளின் மீது நிலையாக வைப்பதற்கு ஆன்மீக வழியில் பழக வேண்டும். சிலபேர் மனதை கஷ்டப்பட்டு தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள். ஆனால் அந்த மனதினை ஒரு பொருளின்மீது நிலையாக வைக்காமல், அதன் போக்கில் விட்டு விடுவார்கள். இதனால் ஆன்மீக வாழ்வில் நமக்கு ஒரு பயனும் ஏற்படுவதில்லை. மனதினை கட்டுப்படுத்தி ஒரு பொருளின் மீது நிலையாக வைத்திருப்பதற்குப் பெயர்தான் ஆன்மீகத்தில் சமாதானம் ஆகும்.

மனதினை ஒருமுகப்படுத்துவது எப்படி என்றால் அதற்கு உபாயம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால், மனதினை ஒருமுகப்படுத்தும் செயலில் நிலையாக வைத்துக்கொள்வதற்கு பலவிதமான ஆன்மீக வழியில் பயிற்சிகள் இருக்கின்றன. அதனை நாம் மேற்கொள்ள வேண்டும். கார், சைக்கிள் ஓட்டுவதற்கு வேண்டுமானால் அவற்றைப்பற்றி விளக்கமாக பள்ளியில் பாடமாக படித்தால் மட்டும் போதுமா? கார், சைக்கிள் போன்றவற்றை ஓட்டுவதற்கு பயிற்சி பெறவேண்டும். நீச்சல் பழக வேண்டுமானால் தண்ணீரில் விழுந்துதான் பழகவேண்டும்.

கார் ஓட்டுவதற்கு வேண்டுமென்றால் நாம் காரை மற்றவரின் துணை கொண்டு ஸ்டீரிங்கைப் பிடித்து ஓட்டி செய்முறை பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் நமது மனதை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு அதனை ஒரு பொருளின்மீது ஒருமுகப்படுத்துவதற்கு பொறுமையுடன் குரு கூறும் பயிற்சியினை கவனித்து அதனை தவறாமல் மேற்கொண்டு வர வேண்டும். ஆரம்ப பயிற்சியாக ஜபம் செய்து பழகும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். ஜபம், தியானம் பற்றி நாம் ஆன்மீக நூல்களைப் படிப்பதாலோ, அவைகளைப் பற்றி ஆன்மீக அன்பர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதாலோ மட்டும் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு முடியாது.

மனம் ஒருமுகப்படுத்துவது பற்றி அதன் தொடர்பாகவுள்ள விளக்கப் படங்களைக் கண்டு களிப்பதாலோ புத்தகங்கள் படிப்பதாலோ நமது மனதினை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முடியாது. நமது மனதினை ஒரு பொருளின்மீது ஒருமுகப்படுத்த வேண்டுமானால் தகுந்த குருவை நாடி அவர் கூறியபடி நாம் மனப்பயிற்சியை மேற்கொண்டு வர வேண்டும். அப்போதுதான் தியானத்தின் பலனை நாம் முழுமையாக உணர்ந்துகொள்ள முடியும். நமது மன அமைதிக்கு மனதை ஒருமுகப்படுத்துதல் முக்கிய பயிற்சியாகும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மனதுக்கு ஒரு பணியினைக் கொடுத்து அந்தப் பணியில் இருந்து மனம் விலகாமல் இருக்க வேண்டும் என்றால் ஜபம் செய்வது என்பது ஒரு பயிற்சியாகும். மனிதனுடைய மனம் ஒரு நொடிகூட ஓய்வில்லாமல் ஏதாவது ஒன்றினை

நினைத்துக் கொண்டேதான் இருக்கும். உயிரை மேவிய உடலை வேண்டுமானால் நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம். தியானம் செய்யும்போது நமது மெய் அசையாமல் இருக்கலாம். ஆனால் நமது மனமானது நம் கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் அலைபாய்ந்து சஞ்சலபட்டுக்கொண்டே இருக்கும். சும்மா இருப்பது சுகம் என்று திருமூலர் கூறியுள்ளார். ஆனால் நாம் நினைப்பதுபோல் சும்மா இருப்பது என்பது அவ்வளவு எளிதானது அல்ல.

சும்மா இருப்பது என்றால் ஒரு செயலும் செய்யாமல் இருப்பது என்று ஆன்மீகத்தில் அர்த்தம் அல்ல. நமது மனம் எந்தவித சிந்தனையில்லாமல் வெறுமையாக இருக்க வேண்டும். நாம் ஒரு செயலும் செய்யாமல் கையைக் கட்டிக்கொண்டு இருந்து விடலாம் என்பது சும்மா இருப்பது என்பது அல்ல.




மனதில் எந்தவிதமான சிந்தனையும் இல்லாமல் இருப்பதுதான் மிகவும் கடினம். இதனைத்தான் திருமூலர் ‘சும்மா இருந்து சுகம் காணுவது எக்காலம் மனமே’ என்று புலம்பித் தவிக்கிறார். நமது உடலும் உள்ளமும் ஒன்றும் செய்யாமல் தெளிந்த நீரோடை போன்று அசையாமல் இருக்க வேண்டும்.

சஞ்சலப்படும் மனதினை மனிதன் தன்னோட கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஜபம் தியானம் போன்ற ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். புலனடக்கம், இந்திரிய ஒழுக்கம் போன்றவை மனித மனதை ஒருமுகப்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். மனித மனதை மனம் ஒரு குரங்கு என்று கவிஞர்கள், மனதினை கிளைக்கு கிளைக்குத் தாவும் குரங்குக்கு ஒப்பிட்டு பாடியுள்ளனர். மனம் எதைப் பற்றியும் நினைக்க வேண்டாம் என்று நினைத்தாலும் காரணமில்லாமல் எதையாவது நினைத்துக்கொண்டே இருக்கும். ஆரம்பத்தில் இந்த மனதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் மனதிற்கு ஜபம் ஒரு முக்கிய சாதனையாகும். அப்படி ஜபம் செய்யும்போது முழுமன ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.

நம்மில் பலபேர் உதடுகள் ஜெபத்தில் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் ஆனால் அவர்கள் மனம் அதன்போக்கில் எங்கெங்கோ எண்ணங்கள் போய்க்கொண்டிருக்கும். சாதுவிடம் ஒருவர் நான் ஒரு வருடமாக விடாமல் சகஸ்ரநாமம் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். மற்றொருவர் நான் தேவாரம் திருவாசகம் பக்தியுடன் படித்துக் கொண்டிருக்கிறேன். என்னோட மனதினை ஒருமுகப்படுத்த முடியவில்லையே என்று வருத்தப்பட்டுக் கூறினார். மனம் ஒருமுகப்படுத்த வேண்டுமானால் எண்ணமும் செயலும் ஒன்றுபோல் ஓரிடத்தில் குவிய வேண்டும். என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் மனதிடம் ஜபம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தினை ஒதுக்கீடு செய்வதற்கு மனதிடம் மனதிற்குள் கட்டளையிட்டுக் கொள்ள வேண்டும். இது மனதிற்கு ஒரு மனப்பயிற்சி ஆகும். மனதில் வைராக்கியத்துடன் நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஜபம் செய்து பூஜை செய்யவேண்டும் என்று மனதிற்குள் நினைத்து, அதனை தவறாமல் நாள்தோறும் செயல்படுத்தினால் நம்மையறியாமலே குறிப்பிட்ட நேரத்தில் அந்தப் பணியினை செய்யும்படி நம் மனமே நம்மைத் தூண்டிவிடும். இந்த இடத்தில் நாம் மனதின் வழியில் செல்லாமல் அறிவின் வழியில் சென்றால் நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும்.

பொதுவாக நமது மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தால் நாம் நினைத்த பணியினை முழுமையாக செய்து முடிக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஒரு சித்திரம் வரைய வேண்டுமானால் ஓவியனின் மனம் ஓவியம் வரையும்போது அதில் ஈடுபாட்டுடன் வரைய வேண்டும். ஏதோவொரு காரணத்தினால் ஓவியனின் மனம் சஞ்சலத்தில் இருக்கும்போது ஓவியம் வரைவதில் அவன் கவனம் செலுத்துவதற்கு முடியாது. இதனைத்தான் பெரியவர்கள் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை போல்தான் என்பதை தாங்கள் நினைத்தபடி ஒரு செயல் செய்ய முடியவில்லை என்றால் இப்படி கூறுவார்கள்.

எனவே மனதை ஒருமுகப்படுத்துவதர்க்கு ஜபம் என்ற சாதனையை தவறாமல் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். மனதிற்கு குறிப்பிட்ட நேரத்தில் ஜபம் செய்ய வேண்டும் என்று முழுமையாக அதற்கு கட்டளையிட்டு விட்டால் அந்த நேரத்தில் எத்தகைய சூழ்நிலையில் இருந்தால்கூட ஜபம் செய்வதற்கு நமது மனமே

நம்மைத் தூண்டி விடும். நமது மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தால் நம்மிடம் இந்திரிய ஒழுக்கம் மனக்கட்டுப்பாடு இல்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஒழுக்கங்களை நாம் முழுமையாகக் கடைபிடித்தால் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும் என்ற நம்பிக்கை வரவேண்டும். ஒருவர் எந்தப் பணியினை மேற்கொண்டாலும் அவர் மனம் முழு ஈடுபாட்டுடன் செய்தால்தான் வெற்றி பெறமுடியும். இதனை மனதில் நிலை நிறுத்தி வாழ்ந்தால் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நம்பிக்கை எங்கு முழுமையாக இருக்கிறதோ அங்குதான் நமது மனம் குவியும் ஒருமுகப்படும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒருவன் கஷ்டப்படும்போது பெரியவர் ஒருவர் அவனுக்கு ஆறுதல் கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம்.

அந்தப் பெரியவர் கூறும் வார்த்தைகளை அவன் நம்பிக்கையுடன் காது கொடுத்து கவனமுடன் கேட்டால்தான் அவன் மனம் சமாதானம் அடையும். அதற்குமாறாக அந்தப் பெரியவர் ஒருமணிநேரம் அறிவுரைகள் கூறினாலும் கேட்பவர் நம்பிக்கையுடன் பெரியவர் கூறுவதைக் கவனமுடன் கேட்கவில்லையெனில் அவனது மனம் சஞ்சலத்தில் இருந்து மீள்வதற்கு முடியாது.

ஒருவர் கூறும் அறிவுரைகளை மனம் ஒருமுகப்படுத்தி கவனமுடன் நம்பிக்கையுடன் கேட்டால்தான் அந்த அறிவுரையைப்பற்றி நாம் புரிந்து செயல்புரிவதற்கு முடியும். அதன் மூலம் நமது மனம் அமைதி அடையும். இந்த இடத்தில் நம்பிக்கை அவசியம் வேண்டும் என்பதை நாம் புரிந்துகொண்டால், மனம் ஒருமுகப்படும். அவன் விரும்பும் தேடும் அமைதியும் மனதிற்கு கிடைக்கும். நமது வீட்டில்கூட பெரியவர்கள் சிலர் ‘நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன் அவன் கேட்க மாட்டேன் என்கிறானே’ என்று அலுத்துக் கொள்வார்கள். அதற்கு காரணம் பெரியவர்கள் கூறும் அறிவுரைகளை கேட்பவர்கள் மனம் கவனமுடன் கேட்கவில்லையென்றுதான் அர்த்தம் ஆகும்.

சிலபேர் தாங்கள் செய்யும் செயல்களுக்கு தங்கள் மனதிற்குள்ளேயே அந்த செயலுக்கு ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள். அவர்கள் எடுத்த முடிவைத் தவிர எந்த முடிவினையும் மற்றொருவர் அவருக்குத் தீர்வாகக் கூறினாலும் அவர் ஏற்றுக் கொள்வதில்லை. நன்மை தரக்கூடிய தீர்வாகக்கூட இருந்தாலும் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே பிறர் கூறும் கருத்துக்களை அறிவுரைகளை மனம் ஒருமுகப்படுத்தி அவர் என்ன நம்மிடம் கூற வருகிறார் என்பதை முதலில் கேட்டுப் பழக வேண்டும். அவ்வாறு இருந்தால் நமது மனம் ஓரளவு மனம் அமைதி அடையும்.

ஒருவர் கூறும் முடிவு அல்லது கருத்துக்கள் தனக்கு உடன்பாடாக இருந்தால் ஏற்றுக்கொள்வதற்கு தயங்கக்கூடாது. இதில் சிலபேர் கவுரவம் பார்த்துக்கொண்டு மற்றவர்கள் கூறும் கருத்துக்கள் உடன்பாடாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளுவதற்கு மாட்டார்கள்.

அப்படிப்பட்டவர்கள் எப்படி ஒரு தீர்வு அல்லது மன அமைதி காணமுடியும். எந்தப்பணி செய்தாலும் சிரத்தை இல்லையென்றால் மனதை ஒருமுகப்படுத்தி செய்யவில்லையெனில் அந்தப் பணியில் வெற்றி காண்பது அரிது. ஒருவருக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஜபம் தியானம் மற்றும் தங்கள் இஷ்ட தெய்வத்தின் சுலோகங்கள், தேவாரம் திருவாசகம் விநாயகர் அகவல் போன்றவற்றை பற்றி படிக்கலாம்.

அடிக்கடி ஆன்மீக சொற்பொழிவுகளில் மற்றும் சத்சங்கங்களில் கலந்து கொள்ளலாம். அதனால் நமது மனம் வேண்டாத எண்ணங்களிலிருந்து அப்போது ஈடுபடுவதை தவிர்க்க முடியும். ஜபம் மந்திரம் கூறினாலும் மன ஈடுபாட்டுடன் கூற வேண்டும். சிலபேர் மந்திரங்களோ ஜபமோ சுலோகங்களோ அவர்களின் உதடுகள் சொல்லிக்கொண்டு இருக்கும்.

ஆனால் அவர் மனம் பலவித எண்ணங்களில் உலக விசயங்களை நினைத்துக் கொண்டு இருக்கும். இதற்கு நாம் பலவிதமான ஆன்மீக பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எதிலும், விடாமுயற்சி நம்பிக்கை முழு ஈடுபாடு இருந்தால் நாம் தேடும் ஆன்மீக வழியில் அமைதி கிடைக்கும். நமது மனதை ஒருமுகப்படுத்துவதனால் நமக்கு என்ன பயன் அல்லது பலன்கள் கிடைக்கும்.


**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308



**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com



# விருப்ப சந்தா



## ஆன்மிகமலர்.காம் இணையதளம் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கு

## விருப்ப சந்தாவை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**சந்தா செலுத்த விரும்புபவர்களை வரவேற்கிறோம், விருப்பமில்லை என்றால் எவ்வித கட்டாயமும் கிடையாது, தொடர்ந்து நமது வாசகர்களாக தொடர்ந்து நமது இதழை படித்து பயன்பெறலாம்.**

**நமது சேவையில் பல்வேறு வளர்ச்சிப் பணிக்கு பொருளாதார ரீதியில் உதவி தேவைப்படுவதால் விருப்ப சந்தாவை அறிமுகப்படுத்துகிறோம்.**



**விருப்பமுள்ள ஆன்மிக அன்பர்கள் ரூ.10 முதல் விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.**

**ஆன்மிகமலர் டிரஸ்ட்** Redg.304/2016

AANMEEGA MALAR TRUST, ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB (FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

குறிப்பு: தொடர்ந்து ரூ.10 அனுப்பும் ஆன்மிக அன்பர்கள் தங்கள் முகவரியை 9444228203 என்ற எண்ணிற்கு வாட்சப்பில் அனுப்பிவைக்கவும். எங்களை தொடர்ந்து ஆதரிக்கும் உங்கள் முகவரிக்கு எங்கள் சேவையை அனுப்பிவைக்கிறோம்.